69

1—2—57

# ஜகன் மோகினி

## நக்ஷத்ர மண்டலம்

குமாரி. ரஜினி
போகிறார்.

மலர் 1. இதழ் 2.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - APR 1957
MADRAS



3L
ஜகன் M1223y
M57.342
188205



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

பிப்ரவரி 1957. மலர் 34, இதழ் 2. துன்முகிஸு தைமீ

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ருவம் தேர்தலும், இந்தூர் அறுபத்திரண்டாம் காங்கிரசும் —V.K. பார்த்தசாரதிஐயங்கார் | 1 |
| பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி | 6 |
| எங்களது இன்பச்செலவு —T. S. ராஜகோபாலன் | 9 |
| மனப்புயல் —P. S. அரவிந்தா | 14 |
| காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி ஸாஸ்திரி | 21 |
| காக்கைச் சிறகினிலே —சின்ன ரங்கா | 24 |
| ஹிந்து சட்ட மாறுதல்கள் —P.M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் | 26 |
| மீனு யாருக்கு? —புஜலா | 30 |
| நக்ஷத்ர மண்டலம் குமாரீராகினி பேசுகிருர் —சாரக்ராகி | 34 |
| என்னருமைத் தந்தை —வை. மு. விஜயலக்ஷ்மி | 38 |
| உண்மை ஊழியன் கதறல் —ஆறுமுகம் | 40 |
| வை.மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம் —வை.மு. விஜயலக்ஷ்மி | 145-160 |


## க்ஷேம லாபங்கள்

வாசகப் பெரியோர்களுக்கு; வணக்கம். உபயகுசலம்.

ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 5-ம் தேதி எங்கள் குடும்பதை ஆட்டிவைக்கும் நாளாக விதி அமைத்துவிட்டது. இதற்குள் 1957-ம் வருடம் பிப்ரவரி மாதம் 5-ம் தேதியை கண்முன் நிறுத்தி, சித்திரவதைசெய்து கதறவைக்கிறது. இருப்பினும் என் தந்தை கடைசீ காலத்தில் கூறிச்சென்ற 'தீபஸ்தம்பம்', என்மனதில் ஜோதிஸ் தம்பமாய் பதிந்து, என் தந்தையின் உருவத்தை நினைத்துக்கொண்டே அதை உருவாக்கி வருகிறேன். அதில் ஒரு சாந்தி! அன்பர்களின் ஆதரவினுல்.

ஒரு உண்மை ஊழியன். அவனுக்கு எட்டு, ஒன்பது வயதிருக்கும்போது எங்கள் ஆபீஸில் வேலைக்கு வந்தவன், சில வருடங்களுக்கு முன்புதான், வேறூர் போய்விட்ட அவன் எங்கள் குடும்பத்தில் ஒருவனுகவே வளர்ந்தான். எங்கள் வீட்டில் ஏற்பட்ட துக்க சமாசாரத்தைக் கேள்வியுற்று அவன் துடித்த துடிப்பை, இவ்விதழில் வெளியாகியுள்ள அவன் கடிதத்தின் மூலம் அறியலாம்.

நேயர்களின் எண்ணங்களை பூர்த்திசெய்துகொண்டு வரும் மோகினியுடன் ஆதரிக்கும் அன்பர்களெல்லோரையும், நாங்களும் வணங்குகிறோம். வை. மு. வி.

ஸ்ரீ. வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், B.A.B.L.,

# வரும் தேர்தலும், இந்தூர் அறுபத்திரெண்டாம் காங்கிரசும்

"வேலன்று வென்றிதரும் மன்னவன்
கோல் அதுவும் கோடா தெனின்"

**பிப்ரவரி 5-ம் தேதி மறக்க முடியாத நாள்.**

ஜகன் மோகினிச் சரிதையில், 5—2—1957, மறக்கொணு தேதியே. வை. மு. ஸ்ரீ. மறைந்து, அன்றுதான் ஓராண்டு நிறைகிறது. அவர் மறைவால் உயிரிழந்த மோகினியும், அவர் பரப்பிவந்த அன்பும் ஞானமுங்காரணமாய், நேயர்கள் காட்டி வரும் ஆதரவினுலேயே புத்துயிர்கொண்டு, பெருமை பெருக்கி வருகிறதென்ற ஆறுதலறிவித்து, இவ்விதழ் தொடங்குவோம்.

## 1857-ம் 1957-ம்.

1857 வருடத்திய மாபெரும் இந்தியக்கலகம் நடந்தேறி, இன்று, ஒரு நூற்றுண்டாகிறது. கத்தியுடன் ரத்தஞ் சிந்தி ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரப் போராட்டம், கத்தியின்றி, ரத்தமின்றி, 1947ல், காந்திமகான் உழைப்பின் பலனுய், வெற்றிபெற்று, சுதந்திர இந்தியா ஸ்தாபிதமாகி, இன்று பத்தாண்டுகள் கழிந்தும்போயின.

காந்திமகான் உருவகப்படுத்திப் பிறப்பித்த குழந்தை, எப்படிவளர்கிறதென்பதை ஆராய்ந்து, இனி வளரவேண்டியமுறைகளைத் தீர்மானிப்பதுவே இந்தவருஷங் கூடிய இந்தூர் அறுபத்தி இரண்டாங் காங்கிரஸ்சபையின்பிரதான நோக்கமாயமைந்தது, ஆச்சர்யமல்ல.

அறுபதாம் ஆவடிக் காங்கிரஸில், 'சோஷலிஸ்டிக் பாட்டர்ன் சொஸைடி'—என்ற சமதர்ம சமூகஸ்தாபனஞ் செய்திடத் தீர்மானித்த நேரு, அன்று முதல் இன்றுவரை இந்தச் சமூகஸ்தாபன முயற்சிகளையேமுயன்று வருகிருர்: அந்தச் சமதர்மக் குழந்தை பிறந்து வளர்கிறது, என்ருர்கள்—. எங்கோ, எப்படியோ என்றுதான் இன்றுவரை அந்த நேருவாலும் இதரர்களாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

**தமிழ் நாட்டில் தேர்தல் நிலைமை.**

பொதுத்தேர்தல்கள் வரப்போகும் இப்பொழுது, அறுபத்திரண்டாவதுகாங்கிரஸ்நடந்தது-ஓர்விதத்தில்நலம். தேர்த

வில்காங்கிரஸ் கட்சி ஜெயிக்கவேண்டுமே யென்ற பொதுக் கவலையுடன், சென்னையில், குறித்த நபர்கள்தான் வெற்றி கொண்டுவரவேண்டுமென்ற தனிக்கவலை, அதிகம் மிகுந்து வருகிறது. காங்கிரஸ் கட்சியுள் பெரும் பிளவுகளென, காங்கிரஸ் விரோதக் கட்சியாளர், பிரசாரமெழுப்பிக் குதூகலிக்கிறார்கள். அதற்கேற்றாப் போலத் தமிழ்நாடு காங்கிரஸ் சபையில், தேர்தல் பற்றிய மனஒற்றுமை யிருப்பதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் விட்டு விலகியிருந்தவர்களெல்லாம், காங்கிரஸ் கொள்கைகளை ஈடேற்றிவைக்க காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியென்ற புதியதோர் தேசீய எதிர்ப்புக் கட்சியாகக் கூடிவருகின்றனர். காங்கிரஸ் கட்சி மந்திரிகளாயிருந்தவர் சிலரை வரும் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக சேர்க்காததால், வெகுவிகாரமான சர்ச்சைகளும், பிரசாரங்களும் நடந்தேறி வருகின்றன.

காங்கிரஸ் அதிகார வர்க்கத்தினர் நியமனஞ்செய்த சிலர், தேர்தலில் காங்கிரஸ் கட்சியாளராக நின்றிட இஷ்டப்படாது விலகிகின்றோ, ராஜீனாமாக்களனுப்பியோ வருகிறார்கள். இதெல்லாம் நோக்கில், இந்திய சுதந்திரப் பாதுகாப்பிற்கென ஸ்தாபிதமாகி வளர்ந்த காங்கிரஸ் கட்சியென்பது, இன்று, பலவித சரீர நோயும், ஆன்ம நோயும் மிகுந்து கிடப்பதாகவே தெரியவருகிறது. இந்த நோய்ப் பாட்டுநிலைமையை அதேகாங்கிரஸ் கட்சிக்காரர்களே அறிந்தும், அதற்குச்சிகிச்சை தேடியே அலைவதாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கை விரித்துக்கட்சிகள் கூட்டித் தலைவர்கள் பெருக்கிவருகின்றனரே யொழிய, வேற்றுமை விலக்கி, ஒற்றுமையேற்படும் வழியேதையுங் காணோம். இதெல்லாம், ஆதி இந்திய தேசீய காங்கிரஸுக்கு பலமோ திடமோ கொடுக்கக் கூடியதாகுமா?....உண்மையில், இப்பொழுது நடந்தேறுவதெல்லாம், அசல் தேசீய காங்கிரஸ் கட்சியைப் பிளந்து, பல போலிக் காங்கிரஸ் கட்சிகள் கிளப்புவதாகவே தோன்றுகிறது. எல்லாம் தேர்தல்காலப் பிரசாரங்களாகவும், பகட்டுப்பேச்சுக்களாகவுந்தான் விளங்குகிறது. தேர்தல் முடிந்து, அதிகாரம் வருவோரும், அதை எதிர்ப்போரும், உண்மைதேசீயபக்தியுடன் சமூகநலனுக்காகத்தெய்வபக்தியுடன் ஒத்துழைத்துஓர்வழிப்பாடாகஉழைப்பவர்களாயில்லை. தேச சமூக தெய்வங்களின் பெயரில், தத்தம் நோக்குப்படிப் பேசிச்செய்து, பதவியும், பணமும், தலைமையும், சுயநல லாபக்யாதிகளும் தேடிப்போவதிலேயே நோக்கங்கொண்டுளர். இதுதான் சுதந்திர இந்தியாவில், இந்தப் பத்துவருஷ காலமாக நாம் அனுபவத்தில் கண்டறிந்த உண்மை.

1832-5

**ஊர் இரண்டுபட்டல்ல?........**

நல்ல சோற்றில், கல் ஆராய்ந்தெடுத்து அகற்றலாம். மணற் சோற்றில், கல் ஆராய்ந்தகற்ற யாரால்தான் கூடும்? ஒரு நேருவாலோ, ராஜேந்திர பிரஸாத்தாலோ, ராஜாஜியாலோ மட்டும், உலக சமாதானமோ, இந்திய க்ஷேமலாபமோ, தெய்வ பக்தியோ, நாட்டிடையும், மக்களிடையும் ஸ்தாபித்திட முடியுமா?—ஒருவர்தான் அதிகாரத் தலைவராயிருக்கக்கூடும். இதரர்கள், எத்துணை பெரியவர்களாயினும், கற்றறிஞராயினும், அவ்வொருவருடன் ஒத்துழைத்தாலே நாடு மேன்மையுறும்; மக்கள் நலம் பெருகும். அஃதன்றி, தலைக்குத் தலை பெரியதனஞ்செய்து, கட்சிகள் ஸ்தாபித்துத் தலைவர்கள் பெருக்கிக் கொண்டே போனால், ஊர் இரண்டுபட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டமென்பது போலத்தான்.

**கட்சிகள் இரண்டே வேண்டும்.**

அரசியலில் யார் என்ன பாவஞ்செய்தாலும், எல்லாம் மக்களைப் பொறுத்ததுவேயெனத்தான் முடிவில் பழிவந்து சேருகிறது. குடியரசு நாட்டிலிருக்க வேண்டியது, இரண்டே கட்சிகள் தாம். ஒன்று, ஆளுங்கட்சி; மற்றொன்று, லாபக்யாதி அபேட்சையின்றி, தேசமக்கள் நலனையேகோரி தெய்வீக நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அதிகாரக் கட்சியரை மேற்பார்வையிட்டு நேர்வழிக் கொணரப் பொது மக்கள் சார்பாகப்பேசி, ஒத்து உழைக்க வேண்டிய எதிர்ப்புக் கட்சி: இதற்குமேல் ஓர் குடியரசில் கட்சிகளிருந்தால், நாட்டிற்குங் கேடுதான், மக்களுக்கும் இடையறாக் கஷ்ட நஷ்டந்தான். நமது இந்தியாவிலும், சுதந்திரம் வாங்கித்தந்த காங்கிரஸ் கட்சியே ஆளுங்கட்சி யெனக்கருதப்பட்டு, தேர்தல் முடிந்து, இதரரனைவரும் எதிர்ப்புக்கட்சியென, வேறு பெயரின்றி அமைந்திட்டால்தான், இனியாவது நேருவும், ராஜாஜியும், பிரஸாத்தும் கொண்ட காங்கிரஸ் கொள்கைகள் முன்வந்து, பலனடைந்து, நம் நாடு, உண்மையில் ஆன்மபலம் மிகுந்து, இதர நாடுகளுக்கு வழிகாட்டியாக அமைந்திடக்கூடும்.

தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களைத் தேருவதில் நடந்தேறும் கலவரங்கள், நாட்டின் நன்மைக் கல்லவென்றே தெளிவாகிறது. ஜாதிமத கட்சிப்பேதம் பாராட்டாது, தேச நலனுக்காகவும், மக்கள் க்ஷேமத்திற்காகவும், தெய்வீக நம்பிக்கை மிக்க சுயநல லாபக்யாதி தேடாத பற்றற்ற பெரியோர்களையே வருந்திவேண்டித் தேர்தல்களுக்கு முன்வைக்கும் மனப்பான்மை நம்மிடை ஏற்பட்டக்காலே நாடு சீர்ப்படும். அதிகார வர்க்கத்தினர் அப்படிச் செய்யாது போவாராகில், தேர்தல்களில் மக்கள் பங்கெடுக்க மறுத்தாவது சாத்வீக எதிர்ப்புசெய்து வெளி நின்றிடவேண்டும்;

இல்லையேல் அப்படிப் பட்ட பற்றற்ற பிரமுகர்களை முன் வைத்திடப் பிரசாரம் நடத்தவேண்டும். தேர்தல் முடிந்து அதிகாரம்பெறும் எக்கட்சியாளரும், தம்மைக் காங்கிரஸ் கட்சியாளரேயென மதித்துக் காங்கிரஸ் நோக்கங்களை அமுலுக்குக் கொணர முயலவேண்டும். இதரர், ஒன்று கூடி, எதிர்ப்புக் கட்சியாயிருந்து, அதிகாரக் கட்சியுடன் நன்மை செய்வதில் ஒத்துழைத்தும், அவர்கள் வழிதவறுவ தாகத் தெரிந்தால், தீவிரமா யெதிர்த்துப்போராடித் தீமை யகற்றியும், காங்கிரஸ் நோக்கங்களையே நேர்வழிகளில் முன்னிற்குக் கொணரத் தயாராயிருத்தல் வேண்டும்.

**காந்தி மகானின் சர்வோதய வழிகள்.**

நல்லவேளையாக, தேர்தல் சமயத்தில் 62ம் காங்கிரஸ் நடந்தது, அரசியல் நிலைபற்றிய சிந்தனைக்காவது இடந்தந் தது. சோஷலிஸம் வேறு, ஆவடி சோஷலிஸ்டிக் பாடெர்ன் வேறு என்று விளக்கி, இனி நாம் வேண்டுவது காந்திமகான் விவரித்த சர்வோதய வழியான சமதர்ம சமூகமே என்ற அறிவு, இந்தக் காங்கிரஸ் சபையில் உதித் தது, தேர்தல் காரணந்தான்.

**காந்தி** மகானின் சர்வோதய அடைப்படை யாவை?— (1) தெய்வ நம்பிக்கை. (2) தெய்வ பக்தி, (3) எல்லா மதங்களிலும், எல்லா ஜாதியாரிடமும் மதிப்பும், மரியாதை யும், இஷ்டதேவதா வழிபாடுவிருத்தியும் (4) பிறரையும் தன்னைப்போலப் பாவித்து, சிருஷ்டி ஒவ்வொன்றிலும் ஈச்வர பிம்பங்கண்டு, பிறரையுந் தன்னைப்போல் பாவித்து நடத்தல். (5) ஊர் வாழ்ந்தால், குடி வாழும் என்ற நம்பிக்கையுடன், பொது நலத்திற்காக உண்மைத் தொண்டும் சேவையுஞ்செய்து உழைத்தல். (6) செய்வன வெல்லாம், பயன்கோராது, பொதுநன்மைக்கேயான ஈச்வ ரப் பிரீதிகரமனதாகச் செய்து முடித்தல். (7) இத்தொண் டில் எதிர்க்கும் விரோதிகளையும், அன்புடன், பலாத் காரமின்றி எதிர்த்து, அவர்கள் குற்றம் அவர்களே யறிந்து, நாம் செய்வதே நேரெனத் தெரிந்து நம்முடன் ஒத்துழைக்க வரும்வரைச்சாத்வீகத்தியாகஞ்செய்துநிற்றல். இவைதான் முக்யமான ஆன்ம பல விருத்திக்காகத் தேசத் தலைவர்களிடம் பொருந்த வேண்டிய அடிப்படைக் காந்திய குணநிசயங்கள், அத்தகைய குணங்கொண்ட சபையாளர் களையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அத்தகையோர் தேர்தலுக்கு நில்லாவிட்டால், அவ்விடத்தில் தேர்தல்செய் திட மறுத்திடுவதே மக்கள் கடமை.

**ஆன்மபலம் மிகுந்த வழிகாட்டிகள் ஆவோமாக.**

1857 வருடத்திய இந்தியச் சுதந்திரக் கலகம் ஆரம் பித்த முதல் நூற்றாண்டில், சென்னைப் பல்கலைக் கழகக்

கல்வித்துறை முதல் நூற்றாண்டு வருஷத்தில், காந்திய சர்வோதய சமூகஸ்தாபனஞ் செய்திட அறிவு உதித்து.உறுதி கொள்ள அறுபத்திரண்டாம் காங்கிரஸ் மகாநாடுகூடியது நமது அதிர்ஷ்டமே. அது தீர்மானித்த சர்வோதய சமதர்மசமூகத் தேர்தலில், நாமும் உண்மைச் சத்தியாகிரகிகளாகி நமது அரசாங்கம் மதப்பற்றற்ற தென்ற அடிப்படைப் பிழையை அகற்றிடச் செய்து, சர்வமத மதிப்பு கொண்ட தெய்விகப் பற்றுமிக்க அரசாங்கமே யெனத் தன்னை வெளியிட்டுக் கொள்ளச்செய்வோமாக! உண்மை சர்வோதய சமுதாய சமூகஸ்தாபனஞ் செய்து, சமதர்ம நோக்குடன் ஆன்மபலம் மிகுத்தி, சாத்வீக தியாகிகளாகிய உலக வழிகாட்டிகளா யமைவோமாக! அதிகாரக் கட்சியாகிய காங்கிரஸ்கட்சியும், அதன் எதிர்ப்புக் கட்சியுமே நமது இந்தியாவை ஒத்துழைப்புடன் நலம்பெற ஆண்டிடத் தேர்தல் நடந்தேறி, மதப்பற்று மிக்கக் குடியரசு ஸ்தாபிதமாகுமாக.

**திறனும், தேர்ச்சியுமே நோக்காக கொள்ளவேண்டும்.**

‘அரசு எவ்வழி, குடிகள் அவ்வழி’. கட்சிப்பற்றுவிட்டு, பதவித் தேட்டமில்லாத உண்மை அறிவாளர்களையும் உழைப்பாளர்களையுமே பாராளும்மன்றங்களுக்கும்,ராஜீய சபைகளுக்கும், மக்கள் மன்றங்களுக்கும் வேண்டியனுப்பிட மக்கள், மனங் கொள்வாராக. நம் நாட்டைப்பீடித்து வருத்திப் பாழாக்கும் கொள்ளை நோய், உண்மையில், நம்மிடையிருக்கும் ஜாதிமத வர்ணாசிரம பேதங்களல்ல. இப்பேதங்களை வீணில் மிகுத்துக் காட்டிப்போவது, மித்ரபேதவாதிகளதும், நாஸ்திக உலோகாயதரர்களான சுயநலவாதிகளதுவும் வாதம். உலகை நல்வழி ஆக்கி வளர்ப்பது, பேதங்களே! உண்மை நோய், இப்பேதங்களை வேறுபடுத்திக்காட்டிப் பிளவுகள்மிகுக்கும் துவேஷமே—இனியாவது, ஜாதிமதத் துவேஷப் பிரிவினைப் பேச்சுக்களை மறந்து, திறனும், தொண்டும், தேர்ச்சியுமே முன்னோக்காகவைத்து மக்களும் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்புவாராக!— தேர்தலடையும் மக்கட் பிரதிநிதிகளும் தெய்வ நம்பிக்கையுடன், எல்லா ஜாதி மதத்தாரிடமும் மதிப்பும் மரியாதையும் வைத்து, திறனும், தேர்ச்சியுமே நோக்காகக் கொண்டு, மந்திரிகள் தேர்ந்து, பதவி பகிர்ந்து, காந்திய சர்வோதய சமதர்மவழி அரசு நடத்துவாராக!—

“பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லாது நாடு”—

✻

# பகவத்கீதைக் குறிப்புகள்

ஸ்ரீராஜாஜி

## பத்தாவது அத்தியாயம்.

**சுலோகங்கள் : 1-11**

இந்தச் சுலோகங்களில் சொல்லப்படும் விஷயம்:

'ஞானமும் உள்ளத்தில் உரமும் இருந்தால் அல்லவோ பகவான் சொல்லிவந்த வழியைப் பின்பற்ற முடியும். கோப தாபங்களை அடக்குவதும், சுகமும் துக்கமும் சமமாகப் பாவித்து மனம் நடுநிலையில் நிற்பதும்—இவையெல்லாம் என்னால் முடியுமா?' என்று யாரேனும் பக்தன் சந்தேகம் கொண்டு பயந்தால் பகவான் 'பயப்படாதே!' என்கிறான்.

"அனைத்தும் நான் என்பதை உறுதியாக நம்பு. எந்த உயர்ந்த பொருளும் உயர்ந்த குணமும், மனிதனுக்கு ஏற்படும் நன்மை தீமை அனைத்தும் நானே. அனைத்தும் நானேயானபடியால் என்னையே நம்பிச் சரண் புகுந்து பக்திசெய்பவனுக்கு ஒரு பயமும் வேண்டியதில்லை. அறிவு விவேகம்; உள்ளத்து உரம், ஞானம் இவையெல்லாம் என் பக்தர்களுக்கு நான் தருவேன். அறியாமையான இருள் தானகவிலகி விளக்கம் பிறக்கும். இடைவிடாமல் என்னைத் துதிசெய்துகொண்டு என்னைப்பற்றியே மகிழ்ச்சியும், களிப்பும் கொண்டு காலம் செலுத்தும் என் பக்தர்கள், எதைப் பற்றியும் பயப்படவேண்டியதில்லை. அவர்கள் சாஸ்திரம் படிக்காதவர்களாயினும், இயற்கையில் புத்தி கூர்மை யில்லாதவர்களாயினும், என் அருளைப்பெய்து அவர்கள் உள்ளத்தில் ஞான விளக்கை ஏற்றி இருளை அகற்றுவேன். எல்லா ஞானமும் அவர்களுக்கு நான் தருவேன்!" என்கிறான் கண்ணன். அவன் அடியைத் தொழுதால் அவன் நம்முடைய மயர்வு அறுத்து, மதிநலம் அருள்வான், நிச்சயம்.

இதையே முதலில் சொல்லித்தான் நம்மாழ்வார் திருவாய்மொழியை அருள்கிறார்.

**"உயர்வு அற உயர்நலம் உடையவன் யவன்?—அவன்**
**மயர்வு அற மதிநலம் அருளினன் யவன்?—அவன்**
**அயர்வு அறும் அமரர்கள் அதிபதி யவன்?—அவன்**
**துயர் அறு சுடர்அடி தொழுதெழு என் மனனே!"**

என்றார் அல்லவோ? இந்தப்பதினெருசுலோகங்களின் கருத்தும் நம்மாழ்வார் சொல்லிய இதுவே.

**சுலோகங்கள் : 12-18**

இந்தச் சுலோகங்களில் பகவானுடைய சர்வவியாபகத்தையும் அவனே எல்லாம் ஆவான் என்பதையும் அர்ஜுனன் அனுபவித்து ஆனந்தம் அடைகிறான்.

"எல்லா ரிஷிகளும் இதையே சொல்லியிருக்கிறார்கள். அதற்கும்மேல் நீயே நேரில் உன் திருவாயால் சொல்லி என்னைக் களிப்பேறச் செய்கிறாய். திரும்பத் திரும்ப அதைக் கேட்க விரும்புகிறேன்" என்று சொல்லிப் பகவானை விஸ்தரித்துச் சொல்லும்படி கேட்கிறான்.

**சுலோகங்கள் : 13-42**

பகவான் அர்ஜுனனுக்குத் தன் மகிமையை எடுத்துச் சொல்கிறான்.

இதற்கிடையில் ஒரு விளக்கம் செய்வது நல்லது. பரம்பொருளான நாராயணனை நான்கு விதத்தில் பஜிக்கலாம். பரம பதத்தில் பக்தர்களுக்கு இடையறாத பரிபூரண ஆனந்தம் தந்துகொண்டு அவர்களுடன் கலந்து நிற்கும் நிலை ஒன்று. மற்றொரு வடிவம் அனைத்துக்கும் காரணமாகியும், ஆயினும், எதனுடனும் பற்றுக்கொள்ளாமல் பாற்கடலில் 'அறிதுயில்' என்கிற யோக நிலையில் இருப்பதாகவும் நாராயணனைப் பாவித்துப் பஜிக்கலாம். மூன்றாவதாக பிரபஞ்சத்தில் உள்ள மேன்மைகள் அனைத்தும் அவனுடைய பிரதாபமே என்று உணர்ந்து அந்த மேன்மைகளில் அவனைக்கண்டு பஜிக்கலாம். இதுவே அவனுடைய விபூதி வடிவம் என்று சொல்லப்படுவது. நான்காவது அனைத்திலும் அவன் அந்தர்யாமியாகவும் உயிருக்கு உயிராகவும் இருப்பதை உணர்ந்து வழிபடுவது. மூன்றாவது வழி சுற்றிநோக்கிக்காண்பது; நான்காவது உள்ளத்தில் இருப்பவனை உள்நோக்கிக் காண்பது.

இந்த அத்தியாயத்தில் கண்ணன் உபதேசிப்பது பகவானுடைய விபூதி நிலை. 'என் விபூதிகளுக்கு எல்லையில்லையாயினும், சிலவற்றை உதாரணமாகச்சொல்லி விளக்குகிறேன்" என்கிறான்.

பல உதாரணங்களை அழகாகவும் மனத்தில் பதியும்படியாகவும் சொல்லிவிட்டு, இவ்வாறு பலபடியாக விளக்குவது என்னத்துக்கு? "இந்த ஜெகமெல்லாம் என்னுடைய ஒரு அம்சம் மாத்திரம் கொண்டு நிற்கிறது என்று அறிவாய்!" என்று முடிக்கிறான்.

இந்த முப்பது சுலோகங்களில் பகவானுடைய விபூதியை உதாரணமுறையில் படித்துக்காண்பதோடு, பொருள்களில் அந்தந்த ஜாதியில் எது சிரேஷ்டமானது என்று கீதையில் எடுத்துக்காட்டுவதாக வைத்துக்கொண்டும் சிலர் அனுபவிக்கிறார்கள்.

ஒரு விஷயத்தை விளக்குவதற்காக உதாரணங்களைச் சொல்லும்போது பிரதானமான உபதேசத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய, அந்த உதாரணங்களையே உபதேசமாகவோ கட்டுரையாகவோ வைத்துக்கொள்ளுவது அவ்வளவுசரியல்ல. உதாரணங்கள் சரியாகவே இருக்கலாம். ஆனாலும் அதுவல்ல கண்ணனுடைய உபதேசத்தின் சாரம். மாதங்களில் மார்கழி மாதமே சிறந்தது என்று உபதேசிப்பதற்கல்ல, கீதாசாரியன் பேசியது! 'மார்கழியை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறார்களே அந்த மகிழ்ச்சிக்கு நான் காரணம்' என்கிறான். சித்திரை மாதத்தைச் சிறப்பாகக் கொண்டாடினால் அதற்கு அவன் ஆட்சேபிக்கவில்லை.

இந்த அத்தியாயத்தில் சிரேஷ்டமாக எடுத்துக்காட்டியிருக்கும் உதாரணங்களில் குறிப்பிடத்தக்கவை.

வேதங்களில் சாமவேதத்தைச் சுட்டிக்காட்டுகிறான்; உபாத்தியாயர்களுக்குள் முதல்வன் பிரஹஸ்பதி; சேனாபதிகளுக்குள் ஸ்கந்தன்; நீர் நிலைகளில் கடல்; மகரிஷிகளுக்குள் பிருகுரிஷி; சப்தங்களுக்குள் ஓங்காரம்; எழுத்துக்களில் அகர எழுத்து; வேள்விகளுக்குள் ஜெபம் செய்யும் வேள்வி; நிலைபெற்ற பொருள்களில் இமயம்; மரங்களில் அசுவத்த மரம்; தேவ ரிஷிகளுக்குள் நாரதர்; சித்தர்களுக்குள் கபில முனிவர்; மக்களுக்குள் அரசனாக இருக்கிறவன்; பால்தரும் பசுக்களுக்குள் காமதேனு; அடக்கியாள்பவர்களுக்குள் யமன்; மிருகங்களுக்குள் சிங்கம்; பறவைகளுக்குள் கருடன்; வில்லாளிகளுக்குள் ராமசந்திரன்; ஆறுகளுக்குள் கங்கை; முடித்துத் தீர்க்கும் சக்திகளுக்குள் மரணம்; பெண்களுக்குரிய குணங்களில் நற்பெயரும், திருவும், மறதியின்மையும், புத்தியும், உறுதியும், பொறுமையும்; சந்தங்களுக்குள் காயத்ரீ சந்தம்; பருவங்களுக்குள் செடிகள் பூக்கும் பருவம்; முனிவர்களுக்குள் வியாசர்; ஆள்பவர்களுக்கு முக்கியமானது தண்டிக்கும்முறை; வெற்றிக்கு முக்கியமானது நீதி சாஸ்திரம்—என்று இவ்வாறுஎடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இதைச் சொல்வது அல்ல கீதோபதேசத்தின் கருத்து. பொருள்கள் யாவற்றிலேனும் சிறப்பும், உறுதியும், திருவும் பொருந்தியதொன்று இருப்பின், அது பகவானுடைய அம்சம் என்று கண்டுகொண்டு பரம்பொருளின் தன்மையை ஓரளவு காண வழியாகும் என்பது உபதேசம்.


✻

# எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபாலன், பி.ஏ.; எல்.டி.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

## 2. ராஜ்கோட்

சௌராஷ்டிரத்தில் நாங்கள் பார்த்தவை ராஜ்கோட், பிரபாஸ் பட்டணம், சோமநாதபுரம், ஜாம்நகர், துவாரகை என்பன. ராஜ்கோட், இதுவரையில் சௌராஷ்டிரத்தின் தலைநகராக விளங்கியுள்ளது. காந்தி அடிகள், தமது சிறு பிரா




சௌராஷ்டிரம்: நாங்கள் சென்ற இடங்கள்

யத்தில் இங்குப் படித்தார் என்பதால் மேலும் மேன்மையுற்றது, இந்த நகரம். பம்பாயிலிருந்து ஆகாய மார்க்கமாக இங்குச் செல்ல $2\frac{1}{2}$ மணி நேரம் ஆகும்; ரயில் மார்க்கமாகச் செல்ல $17\frac{1}{2}$ மணிக்குக் குறையாது.

நாங்கள் ஏறிச் சென்ற சௌராஷ்டிர மெயில் வியக்கத்தக்க வேகத்தில் விரைந்தது; வழியில் சூரத், பரோடா, ஆமதாபாத் முதலிய பெருநகரங்கள் வழியே சென்று மறுநாட் காலை 7-20 மணிக்கு வீரம்காம் சந்திப்பு வந்து சேர்ந்தது. அங்கு நாங்கள் மீட்டர்கேஜ் ரயில் வண்டியில் ஏறினோம்; வண்டியும் 8 மணிக்குப் புறப்பட்டது. சிறிது நேரத்திற் கெல்லாம் நாங்கள் சௌரஷ்டிரத்தில் உட்புகுந்தோம். சௌராஷ்டிரம், நெடுங்காலமாகச் சரித்திரப் பெருமை

வாய்ந்தது. இதனுள் ஹூணர்கள், ரோமானியர், கிரேக்கர், பாரசீகர், அரேபியர், இன்னும் பல ஜாதியர் படையெடுத்துச் சென்றுளர், ஆதலால் பலவகையான மக்களின் நாகரிகச் சின்னங்கள் பலஇங்கு இன்றும் உள்ளன. இங்கு வந்து குடியேறிய மக்கள், ராஜபுத்திர வமிசத்தைச் சார்ந்தவர்; கொடைத் திறனும் புய வலிமையும் வாய்ந்தவர்; கண்ணியமான முறையில் வாழ்க்கையை நடத்திவந்தவர் இப்போதுள்ள மக்களும் கம்பீரமான தோற்றம் வாய்ந்தவர்கள். இவர்கள் நல்ல உடைகளை அணிந்துகொள்ள விருப்பமுடையவர்கள். ஏழைகளுங்கூடப் பலவித வர்ணங்களில் அழகுறச் செய்யப்பெற்ற ஆடைகள் உடுத்திக் கொள்ளுகின்றனர். குடியானவப் பெண்களும் கூலிவேலை செய்யும் பெண்டிரும் இடுப்பில் பாவாடை உடுத்துள்ளார்கள்; இது பெரும்பாலும் சிவப்பு நிறமுடையது, உயர்ந்த பூவேலைப்பாடு கொண்டது. இவர்கள் மார்பில் சோலி என்ற கச்சு அணிந்துள்ளனர். இதற்குப் பின்புறம் இல்லை; முதுகுப் பக்கத்தில் இதை ஒரு கயிற்றால் கட்டிவிடுகிறார்கள். இது முன்பக்கத்தில் மார்பையும், தோளின் சிறிது பாகத்தையுந்தான் மறைக்கும். இதற்குமேல் சால்வைபோன்ற ஒதாணி என்பதைப் போர்த்திக் கொள்ளுகின்றனர்; இதுவும் நல்ல வேலைப்பாடு வாய்ந்தது. பணக்காரப் பெண்டிருள் பலர், இப்போதை நாகரீக முறையிலேயே உடை அணிந்து கொள்ளுகின்றனர். இங்குள்ள பெண்பாலருள் அஹிர் என்ற இனத்தினர் கறுத்த உடையே உடுத்திக் கொள்ளுகின்றனர்; க்ருஷ்ண பகவானிடம் பேரன்பு கொண்ட ராதை, தங்கள் இனத்தைச் சேர்ந்தவள் என்று இவர்கள் சொல்லிக் கொள்ளுகின்றனர்; ஆதலால் கிருஷ்ண பகவானது மறைவால் தங்களது துயரைக் காட்டுவதற்காக இவர்கள் இன்னும் கருப்பு உடைகள் உடுத்திக் கொள்ளுகின்றனர். ஆடவர்கள் பைஜாமாவும், பாவாடை போல் அருகுகொண்ட அங்கியும், தலையில் முண்டாசும் அணிந்துள்ளனர். புக்ரி எனப்படும் இந்த முண்டாசு, வர்ணத் துணியாலானது. இது பதினைந்து வகையானது. மக்கள் பாட்டிலும் நாட்டியத்திலும் மிகவும் விருப்பமுடையவர்கள். பெரிய விழாக் காலங்களில் ஆடவர் பெண்டிர் அனைவருங் கூட்டங் கூட்டமாகப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் செல்லுவார்கள். இங்குள்ள மக்களின் ஜீவனம் பயிர்த்தொழிலும் ஆடுமாடு மேய்த்தலுமேயாகும். குடியானவப் பெண்டிரும், ஆடவர்களைப்போல் நாள் முழுதும் பாடுபட்டு உழைத்து வருகின்றனர்.

வீரங்காமிலிருந்து செல்லும்போது கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் நிலம் தரிசாகவே கிடந்தது சமீபத்தில் பெய்த மழையால் ஆங்காங்குச் சிறிது பயிர் பச்சைகள்

தென்பட்டன. இடையிடையே சிறு கால்வாய்களில் சிறிது தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. இந்தப் பிரதேசத்தில் ஆங்காங்கு மயில்கள் அழகிய தோகையைத் தரையில் தாழ்த்து, உல்லாசமாக நடமாடிக் கொண்டிருந்தன. ஆடுமாடுகள் புல்வெளிகளில் மந்தை மந்தையாக மேய்ந்துகொண்டிருந்தன. பசுக்கள், எருதுகள்—இவற்றின் கொம்பு, எருமையின் கொம்பைப் போல் கனத்தும் வளைந்தும் இருந்தது. சில மாடுகளின் காது, அடியில் இற்றுத் தொங்கிக் கொண்டிருந்தது. ஒட்டகைகள், குதிரைகள்—இவை எங்கும் காணப்படுகின்றன. மக்கள் குதிரைகளின் மீதேறி அங்குமிங்கும் பிரயாணம் செய்கின்றனர். அவர்கள் பண்டங்களை ஏற்றிவரும் மாட்டு வண்டிகள், மிகவும் பழைமையானவை, சாலைகளும் பெரும்பாலும் நல்ல நிலையில் இல்லை.

சுரேந்திர நகர் வரும்போதுதான் நிலப் பரப்பின் தோற்றம் கண்ணுக்குச் சிறிது இனிமையாக இருந்தது. சுமார் 20 மைல் மேற்கில் மாதுல் (**Madhul**) என்ற பெரிய ஆறு பாய்கிறது. அதன் கரையில் வான்கனர் (**Wankaner**) என்ற நகரம் அமைந்துள்ளது. இதிலுள்ள அரண்மனை சலவைக் கற்களாலானது ; இதையும் இதை அடுத்துள்ள மாளிகைகளும் உயர்ந்ததொரு குன்றின் மேலுள்ளன. ஆற்றின் இரண்டு அருகுகளிலுமுள்ள மாளிகைகளும், இவற்றை அடுத்துள்ள தோட்டங்களும் இந்த நகரின் அழகைப் பன்மடங்கு அதிகமாக்குகின்றன.

நாங்கள் சுமார் 2 மணிக்கு ராஜ்கோட் சந்திப்பு (**Rajkot Junction**) வந்து சேர்ந்தோம். எங்களை வரவேற்பதற்காக எங்களிடம் படித்த பழைய மாணவர்கள் பலர், ரெயில்வே மேடையில் எங்களது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். எங்களிடம் சிறிது நேரம் அளவளாவிவிட்டு, எங்களை அருகிலுள்ள பள்ளிக்கு அழைத்துச் சென்றனர்; அன்றிரவு வரையில் நாங்கள் அங்குத்தான் தங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது. அன்று முழுதும் இந்தப் பழைய மாணவர்கள் எங்களுடனே இருந்து, நகரம் முழுவதையும் சுற்றிப் பார்க்க அழைத்துப்போயினர்.

நாங்கள் இறங்கியிருந்த பகுதி, புதிதாக நிருமிக்கப் பெற்றது. தெருக்கள் புதிதாகத் தோன்றியுள்ளன; வீடுகள் யாவும் புதுமுறையில் கட்டப்பெற்று வருகின்றன. ராஜ்கோட்டில் தமிழ் மக்கள் சுமார் 700 பேர் வசிக்கிறார்கள். இவர்களுக்குத் தமிழில் ஆர்வம் அதிகம். இவர்கள் தமிழ்ச் சங்கம் ஒன்று அமைத்துள்ளார்கள்; வாரம் ஒரு முறை இதில் சொற்பொழிவாவது கச்சேரியாவது நடக்கும்.

நாங்கள் தங்கியிருந்த வன்று ஹரிகதா காலக்ஷேபம் ஒன்று நடந்தது.


சாப்பாட்டிற்குப் பிறகு நாங்கள் நகரைச் சுற்றிப் பார்த்தோம். முதன் முதலில் அருகிலுள்ள ஜுபிலி தோட்டத்திற்குச் சென்றோம். மாலை வேளையில் மக்கள் பொழுதுபோக்குக்காக இங்கு வருகிறார்கள். இதில் ஒரு பொருட்காட்சிச் சாலை (Museum) யும், வாசகசாலையும், பொது மண்டபமும் உள்ளன. பொருட்காட்சிச் சாலையில் பார்க்கவேண்டுவன அதிகமில்லை; அந்தப் பிராந்தியத்தில் நெடுங்காலமாக நிகழ்ந்து வந்த மண் வேலைப்பாடு, மர வேலைப்பாடு முதலியன இங்குக் காட்டப்பெற்றுள்ளன. இந்த தோட்டத்தைக் கடந்து சென்றதும் ஒரு நெடுஞ் சாலைக்கு அப்புறமாக ஆல்பர்ட் பள்ளிக்கூடம் (Albert School) உள்ளது; இதில்தான் காந்தியண்ணல் தமது சிறு பிராயத்தில் படித்தார். இந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்த்துவிட்டு நாங்கள் கம்ட்ரோல்லர்ஸ் ஆபீஸுக்கு (Comptroller's Office) நடந்து சென்றோம். அங்கு எங்களுக்கு வரவேற்பு ஒன்று நடந்தது.

அங்கிருந்து சிறிது தூரத்தில் இரண்டு ஏரிகளும், ஒரு பூங்காவும், குதிரைப் பந்தயச் சாலையும் (Race Course) உள்ளன. குதிரைப் பந்தயச் சாலை இப்போது பந்தயத்திற்குப் பயன்படுவதில்லை. இதில் பொழுது போக்கிற்காக மக்கள் ஏராளமாகக் கூடிவிடுகின்றனர். ஆயிரக் கணக்கான மக்கள் மாலை வேளையில் குழந்தைகளை அழைத்துக் கொண்டு இங்குத் தங்குகின்றனர். மாலை 5 மணியிலிருந்து 7 வரையில் இந்த மைதானத்தில் தேர்க் கூட்டம், திருநாள் கூட்டம்போல் ஜனங்கள் உல்லாசமாக பொழுது போக்குகின்றனர். குழந்தைகளுக்கு விளையாட்டுக்கருவிகள் விற்போரும், மிட்டாய்கள் விற்பவரும் எங்குங் கூடிவிடுகின்றனர்; இவர்களுக்கு நல்ல வியாபாரம் நடக்கின்றது. இவர்கள் கூவுவதும், குழந்தைகளின் விளையாட்டொலியும், பெற்றோர்களது மனக்களிப்பும், நண்பர்கள் சந்தித்து அன்பளாவுவதும், இடையிடையே மோட்டார் வண்டிகளின் ஒலியும், ஆடோ ரிக்ஷா, சைகில் ரிக்ஷா, டாங்கா — இவற்றின் ஓசையும் அந்த நிலப்பரப் படங்கலும் நிறைந்து சுற்றுவட்டத்தில் பரவுகின்றன.

ராஜ்கோட்டில் பழைய பிரிவுகளிலுள்ள மாளிகைகள் மிகப் பெரியன; பெரும்பாலும் பழைய முறையிலேயே அமைக்கப் பெற்றன; கம்பீரமான தோற்றம் வாய்ந்தவை. கடை வீதிகளில் மாலைப் போதில் ஜனநெருக்கம் அதிகம். கடைத் தெருவில் குறுகியதொரு சந்தில் வெள்ளி வேலைப்பாடும், தங்க நகைகள், கல்லிழைத்த ஆபரணங்கள் - இவற்

றின் வேலைப்பாடும் நிகழ்கின்றன. பாத்திரங்கள், அணி கலன்கள்—இவை முதல் தரமான வேலைப்பாடுடையனவா தலால், இவற்றிற்கு எப்போதும் கிராக்கி உண்டு. ராஜ் கோட்டில் உள்ள கல்லூரிகளில் முக்கியமானது ராஜ்குமார் காலேஜ் (Rajkumar College) என்பது. இது முதன் முத லில் தனவந்தர்களது பிள்ளைகளுக்காக ஏற்பட்டது. இப் போது இதில் ஏழை மக்களும் படித்து வருகின்றனர்.

நாங்கள் இரவு 7-30 மணிக்குப் பள்ளிக்கூடத்திற்குத் திரும்பி வந்தோம். வழியில் காந்தியடிகளின் நெருங்கிய உறவினர் ஒருவரது வீடு ஒன்று இருந்தது. எங்களுள் சிலர் அங்குச் சென்றனர் அவர்களுள் சிலரைப் பார்த்து விட்டு வந்தோம். இராச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு 9 மணி சுமாருக்கு ரயில்வே ஸ்டேஷன் போய்ச்சேர்ந் தோம். பழைய மாணவர்கள்—சுமார் 20 பேர்—எங்களி டம் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். இருவர் எங்க ளுக்குத் துணையாகத் துவாரகை வரையில் வந்தனர். இரவு 11 மணிக்கு எங்களது வண்டி, ராஜ்கோட்டை விட்டுப் புறப்பட்டது.



பால்காரன்:—ஏன் சாமி! இப்படி பாக்கிறீங்க. தானம் கொடுக்க இது போதாதுங்களா?

யஜமான்:—அப்பா இதை தானம் கொடுக்கறதேவிட பொம்மை பசு வாங்கி தரலாம். அது நிச்சயமா சாகாது.

P. S. அரவிந்தா

# மனப் புயல்

சென்ற இதழ்த் தொடர்ச்சி

வண்டியிலிருந்து வரும் சினேகிதன் மனைவியை வரவேற்கத் தயாராய் இடைகழியில் காத்துக் கொண்டிருந்தாள், சுமதி. வண்டியினின்றும் இறங்கிய மாது கைகளில் கூஜா, பைகள் சகிதம் படியேறினாள். சுமதி ஓடிச்சென்று அவள் கையிலுள்ள கூஜாவை வாங்கிக்கொண்டு, "வாருங்கோம்மா!" என்று அன்பாய் அழைத்து வந்தாள். உள்ளே வந்ததும் வெளிச்சத்தில் பார்த்தால் தனக்கு அறிமுகமான முகமாய்த் தோன்றியது. சட்டென்று நினைவு வராததால் சிறிது தயங்கினாள். ஆனால், வந்தவள் பார்த்ததும் அடையாளம் தெரிந்துகொண்டு, "என்ன சுமதி, முழிக்கிறாய்? சுசீலா... அடையாளம் தெரியவில்லையா?....அப்பாடி! ....போகும் இடத்தில் வீட்டு எஜமானி எப்படி இருப்பாளோ?.........முன்பின் தெரியாது வருகிறோமே என்று யோசித்துக் கொண்டே வந்தேன். அதுவரை, பழைய நாளைய சினேகிதி உன்னையே காட்டிக் கொடுத்தாரே கடவுள்?.......அதுவே நிரம்ப சந்தோஷம், சுமதி!" என்று பெருமிதத்துடன் சொன்னாள்.

"அப்பாடி! சுசீலாவா!......நான் யார் என்று நினைவு வராமல் முழித்துவிட்டேன். வரப்போகும் மனுஷி எப்படி இருப்பாளோ? எந்த விதம் மரியாதை செய்யவேண்டுமோ? என் கணவருக்கு மனக்குறையில்லாது நடந்து கொள்ள வேண்டுமே என்று உனக்குமேல் நான் பயந்து கொண்டிருந்தேன். தேவலை...நீ என் சினேகிதிதானே! தப்பு ஏதாவது நடந்தாலும் கோபித்துக் கொள்ளாதேம்மா!.... வா! நாழி ஆகிறது; ரயில் அலுப்புத் தீரக் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு சாப்பிட வாம்மா!" என்று மிக அன்பாய் அழைத்துச் சென்றாள். தன் தாயார் இறந்த பிறகு தன்னோடு அன்பாய்ப் பேசும் மனிதர்களையே பார்க்காத சுமதிக்கு சுசீலா வந்தது சொர்க்க பதவி கிடைத்தது போன்ற ஆனந்தம் உண்டாகியது. அதிக நாட்களுக்குப் பிறகு சந்தித்த சினேகிதர்கள் போஜனம் ஆனபின்பு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். நடுநிசிக்குப் பிறகுதான் படுக்கச் சென்றார்கள்.

அதிகாலையிலேயே சுமதி எழுந்து காப்பி, பலகாரம் தயாரித்து வைத்துவிட்டு மேலே சமையலும் செய்துகொண்டிருந்தாள். சுசீலா, அவள்கணவர், சேகர் மூவரும் எழுந்து வந்தார்கள். பல் விளக்கப் பல்பொடி கொடுத்து சாப்பியும் அருந்தச் செய்தாள். சுசீலாவும் அவள் கணவர் தாமுவும் மணி ஒன்பதுக்குள் சாப்பாட்டை முடித்துக்

கொண்டு, உள்ளூரிலிருக்கும் தம் சிநேகிதர்கள் உற்றார் உறவினர்களைப் பார்க்கச்சென்றனர். சேகரும் ஆபீஸுக்குச் சென்றுவிட்டான். சுமதி தன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மத்யான டிபன் வேலையில் இறங்கினாள்.

மாலையில் வழக்கத்தைவிட முன்னதாகவே சேகர் ஆபீஸிலிருந்து வந்தான். தாமு வராததைக் கண்டு இங்கும் அங்குமாய் உலாவியவாறு, அவர்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சுமதி காபி, டிபனை மேஜைமேல் கொண்டுவைத்துவிட்டு மறைந்தாள். சேகர் காபியை மட்டும் பருகிவிட்டு டிபனை தாமு வந்த பிறகு சாப்பிடலாம் என்று மூடிவைத்தான் நேரம் போகிறதே தவிர அவர்கள் வரவில்லை ஒருவேளை சுமதியிடம் சுசீலா ஏதாவது சொல்லியிருப்பாளோ, கேட்கலாமா?......என்று நினைத்துப் புறப்பட்டான். சுமதியின் கையைப் பிடித்த நாள் முதல் இதுவரை ஒருவார்த்தை கூட பேசாது இன்று திடீரென்று பேச நா எழவில்லை...ஏனோ அவனையறியாது சங்கடம் செய்தது. கால்கள் தடை கட்டிய நாகம்போல் முன்னே ஒரு அடி எடுத்துவைக்க மறுத்தன. குழப்பத்தோடு தன் அறையை அடைந்தான். பிறகு, வேலைக்காரக் கந்தனைக் கூப்பிட்டு, "டேய்! அம்மாளிடம் சென்று அவர்கள் எப்போது வருவார்கள் என்று ஏதாவது தெரியுமா? கேட்டுவா!" என்றான்.

கூடத்தில் இருந்து இந்த வார்த்தைகளைக் கேட்ட சுமதியின் மனது துடித்தது. தன்னை அக்கினியில் அப்படியே தூக்கிப்போட்டால் கூட இவ்வளவு வேதனை அடைந்திருக்க மாட்டாள் ....'ஆ! இந்த ஒருவார்த்தை என்னை நேரே கேட்கக்கூடவா நான் பாக்யம் செய்யவில்லை! நான் வேலைக்காரனைவிடவா கேவலமானவள்!...சீ! உலகில் ஒரு பெண் அழகாய் இல்லையென்றால் இத்தனை தாழ்வா? என்னைவிட கோரஸ்வரூபம் உடையவர்கள் உலகில் சந்தோஷமாய் வாழவில்லையா?....நான்தானா இவ்வளவு பாவத்தைச் செய்திருக்கிறேன்' என்று நினைக்கும்போது எண்சாண் உடம்பும் ஒரு சாணாய்க் குன்றித் துக்கம் பீறிட்டது. கண்கள் மடைத்திறந்தாற் போல் நீரைக் கக்கின. விக்கிவிக்கி அழுதவாறே சமையல் அறைக்குள் அடைக்கலம்புகுந்தாள். வேலைக்காரனின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு கண்களைத் துடைத்துக்கொண்டு துக்கத்தை சமாளித்தவாறு, "கந்தா! அவர்கள் நாளை காலை வருவதாய் ஒரு ஆள்வந்து சொன்னான் என்று ஐயாவிடம் சொல்லுப்பா!" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள். எவ்வளவு நேரம் அழுது துடித்தாலும் ஆறுதல் சொல்ல யார் இருக்கிறார்கள்? நெடுநேரம் கண்களை மூடிக்கொண்டு கட்டையைப் போல்

விழுந்து கிடந்தாள். ஆனால் அவள் மனது மட்டும் புயலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் படகுபோன்றிருந்தது.

சேகர் 9-மணிக்கு மேல் வெளியிருந்து வந்தான். நடைச் சவம்போல் கணவருக்கு அன்னம் பரிமாறினாள். தனக்குச் சாப்பிடப் பிடிக்காததால் எல்லாவற்றையும் வேலைக்காரர்களுக்குப் போட்டுவிட்டு துரிதமாய்க் காரியங்களை முடித்துக்கொண்டு படுக்கைக்குச் சென்றுவிட்டாள்.

மறுநாள் காலையில் சிநேகிதர்களின் வரவுக்காக சுமதி ஒருபுறம் சேகர் ஒருபுறம் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். சுமதியின் கைகள் அவர்களுக்காகச் சமைக்கிறதே தவிர அவள் மனம் பூராவும் அந்த தம்பதிகளின் ஆனந்த வாழ்க்கையையே நினைத்து நினைத்துப் பொருமியது. அவர்களின் அன்பான பேச்சும் சிரிப்பும் காதில் ஒலித்து இன்னும் வேதனையைத் தூண்டிவிட்டது. உலகத்தில் எல்லா தம்பதிகளும் இந்த ஆனந்த வாழ்க்கை தானே வாழ்கிறார்கள். நான் ஒருத்திதானா அதற்கு விலக்காய்ப் பிறந்தேன்?....இந்த ஜென்மம் எடுக்க என்ன பாவம்தான் செய்தேனோ தெரியவில்லையே! எல்லாம் அம்மாவின் கூத்து! காலம்பூராவும் இருவர் வாழ்வையும்கொடுத்தாள். காவில் நிரந்தரமாய்க் கட்டிவிட்டால் திருந்திவிடுவான் என்று மனப்பால் குடித்து ஏமாற்றமடைந்தாள். சுசீலா பாக்கியசாலி; கண் நிறைந்த கணவரையும், அன்பு நிறைந்த மொழிகளையும் கேட்கக் கொடுத்துவைத்தவள். நான் இரண்டும் அடைந்து அநுபவிக்கக் கொடுத்துவைக்காத பாவி........என்று அதையே நினைத்து நினைத்து உள்ளமே உடைந்து விடும்போல் வேதனைப் பட்டுத்தவித்தாள்.

எதிர் பார்த்து மணி ஒன்பதரை ஆகியும் தாமு,சுசீலா இருவரும் வரவில்லை. எதிர்பார்த்து கண்களும் பூத்துவிட்டன. ஆபீஸுக்கு நேரமாய்விட்டதால், சேகர், சாப்பிடக்கூட நேரமில்லாமல் அப்படியே கிளம்பினான். அந்தசமயம் ஒரு சிறுவன் கவர் ஒன்றைச் சேகரிடம் கொடுத்துவிட்டு, பதில்கூட எதிர் பார்க்காமல் மறைந்தான். கவரின் கையெழுத்தைப் பார்த்துத் தன் சிநேகிதனுடையது என்று புரிந்துகொண்டு அதை ஆவலாய்ப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

"அன்புள்ள சேகருக்கு அநேக ஆசீர்வாதங்கள். நானும் என் மனைவியும் ஒரு வாரம் உங்களுடன் ஆனந்தமாய்க் கழிக்கலாமென்று பலமான மனக்கோட்டை கட்டிக்கொண்டு வந்தோம், ஆனால் நாங்கள் எதிர் பார்த்ததற்கு நேர் எதிராக இருக்கும் உங்கள் வாழ்க்கையைப் பார்த்ததும் ஒரு நிமிஷங்கூட அங்குத்

தங்க எங்களால் முடியவில்லை. நீ இவ்வளவு நன்றி விசுவாசமற்று கேவலம் மிருகமாய் இருப்பாய் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை...சேகர்! நீ நிராதரவாய் நின்ற சமயம் உன்னை உன் அத்தை எடுத்து வளர்த்து ஈரைப் பேனாக்கிப் பேனைப் பெருமாளாக்காதிருந்தால் நீ எந்த நடுச்சந்தியில் கெட்டலைவாயோ தெரியாது. உன்னைச் சீராட்டிப் பாலூட்டி வளர்த்து அன்பைப் பூராவும் சொரிந்து பணம் முழுவதும் உன் சௌக்யத்திற்காகச் செலவு செய்து சொத்தையும் கொடுத்தது இல்லாது தன் பொக்கிஷமாய் வளர்த்த சுமதியையும் உன்னிடம் ஒப்படைத்து உதவிய அத்தைக்கு நீ செய்யும் கைமாறு என்றும் மறக்கமுடியாது. நீ கேவலம் மிருகத்திற்கும் மோசமானவன் என்று பார்த்த பிறகுதான் தெரிந்தது. சுமதியை நடத்தும் விதம் பூராவும் உன் வேலைக்காரன் மூலம் அறிந்து கொண்டோம். என் மனைவி உன் வீட்டில் இறங்கிய நிமிஷமே உங்கள் இருவரின்போக்கை ஒரே நொடியில் தெரிந்து கொண்டுவிட்டாள். நாம் இருவரும் எப்படி சினேகிதர்களோ அப்படி சுசிலா, சுமதியும்கூடபால்ய சினேகிதைகள்தான்.சுமதியின் குணத்தையும் பொறுமையையும் நினைத்து இப்பொழுது அவள் நடத்தும் பயங்கர வாழ்க்கையையும் நினைத்து சுசீலா வருந்தித்தவிக்கிறாள். நீஇருக்கும் மிருகத்தனத்தில் நான் வீட்டில் தங்குவது கூட தப்புதான். சிறிய வயதுமுதல் பழகிய சுமதியை ஒரு காரணமுமில்லாமல் கேவலமாய் நடத்தும் நீ, நான் வீட்டிலிருந்தால் ஒரு வேளை சந்தேகப்பட்டு அந்த உத்தமியை இன்னமும் துன்புறுத்தலாம். உள்ளம் என்பதே இல்லாதவன் எதைத்தான் செய்யத் துணிய மாட்டான்? என்னால் சுமதிக்கு இன்னும் வீண் தொந்தரவு வேண்டாம் என்றுதான் நாங்கள் கிளம்பிவிட்டோம். நீ நடத்தும் கேவலமான முறையில் சுமதியின் உள்ளம் எவ்வளவு அளிந்த புண்ணாயிருக்கிறது என்பதைநீ அறியவில்லை. இதே நிலையில் நீ சுமதியை நடத்தினால் சீக்கிரத்தில் அவளை இழந்து விடுவாய். இனி நாங்கள் அங்கு வரப் போவது இல்லை, நேராய் ஊர்போகிறோம். நீ என்று உலகத்தவர்களைப்போல் சுமதியுடன் வாழ்க்கை நடத்துகிறாயோ அன்று வருகிறோம்.

இப்படிக்கு, உன் அருமை சினேகிதன்
**தாமோதரன்.**

இதைப் படிக்கப் படிக்க சேகரின் கண்கள் இருண்டு உலகமே சுற்றுவதுபோல் இருந்தது. கடிதத்தைத் திருப்

பித் திருப்பிப் பார்த்தான். தாமு இருக்கும் விலாஸமே இல்லாது இருந்தது...ஒன்றும் புரியாது பித்தனைப்போல் கடிதத்தையே விரைக்க விரைக்கப் பார்த்துக்கொண்டிருந்தான்......"ஹா! நான் இவ்வளவு க்ருதக்ஞதையற்றவனாகவா இருக்கிறேன்?...நான் ம்ருகமா?.. நன்றிகெட்ட பன்றியா?....நான் என் கடமையைச் சரிவரச் செய்வதாக அல்லவா நினைத்திருக்கிறேன். சுமதியைக் கொடுமைப் படுத்துகிறேனா? என்னை உலகம் இவ்வளவு கேவலமாகவா நினைக்கிறது? என்ன!...என் ம்ருக வேகத்தில் தாமுவின் மேல் சந்தேகப்பட்டுச் சுமதியை ஹிம்சிப்பேனா?...ஹா! இந்தப் பதங்களை என்னால் பொறுக்கவே முடியவில்லையே!.... இவ்வளவு மோசமாகவா நான் நடக்கிறேன். நான் பேசாத காரணத்தால் சுமதி இவ்வளவு துன்பமா அடைகின்றாள்? இப்போது என்ன செய்வது? ஒன்றுமே புரியவில்லையே! மூளையே குழம்புகிறதே! இந்தக் கடிதத்தை சுமதியிடம் தரலாமா வேண்டாமா என்று தத்தளித்தான். உள்ளே வரவும் மனமின்றி போகவுமனம்வராது தவித்தான். மணி 10க்கு மேல் ஆகிவிட்டதால் ஆபீஸில் கை எழுத்தாவது போட்டுவிட்டு உடனே வந்துவிடலாம் என்றுநினைத்தவாறு ஆபீஸை நோக்கி ஓட்டமெடுத்தான்.

சுமதி ஏதோ கடிதம் வந்ததையும் படித்ததையும்தான் பார்த்தாளேயன்றி அவளுக்கு விஷயம் என்ன தெரியும், பாவம்!...கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கும்? தாமுவிடமிருந்து வந்திருக்குமா?....ஆனால், அக்கடிதத்தைப் படித்ததும் அவர் முகம் ஏனோ பயங்கரமாய் மாறியதே'.......விஷயத்தை என்னிடம் சொல்லாவிட்டாலும் வேலைக்காரன் மூலமாகவாவது சொல்லக் கூடாதா?....அந்தக் கட்டமும் மாறிவிட்டாதா? சீ! என்ன பெண் ஜென்மம் எடுத்தேன். இதைப்போல் வாழ்வு என் விரோதிகளுக்குக்கூட வேண்டாம்!....சீ!....என்னை இவ்வளவு உதாசீனமாய் நடத்தும் போது நான் மட்டும் ஏன் நடுங்கிச் சாகவேண்டும்? வேலைக்காரனிடம் சொல்வதற்கு முன்பு காதில் வாங்கிக் கொண்டு பணிவிடைகள் செய்து எனக்கு என்னபலன் கிடைத்தது? பிறந்தால் சுசீலாவைப்போல் ஆனந்த வாழ்க்கை நடத்த வேண்டும். அவர்கள் இங்கு தங்கியது ஒரே இரவுதான். அந்த ஒரு இரவை என் ஜென்மத்தில் மறக்க முடியாது. அப்படி இருக்கவேண்டிய நான் எப்படி இருக்கிறேன்? இனி எதுவானாலும் சரி; என் இதயம் முறிந்தாலும் சரி; இனி அவர் காலில் விழுந்து கெஞ்சி எனக்கு வாழ்வை அளிக்கவேண்டப் போவதே இல்லை. என் கதி இவ்வளவு தான்....சுமதி!....நீ ஆயுள் பூராவும் இப்படித்தான் கழிக்க வேண்டும்....என்று ஆத்திரத்தால் பொருமினாள். உடம்பு பூராவும் குபீர் என்று வெயர்த்தது. நடுக்கத்தோடு ரத்தம்

கொதிப்பெடுத்தது ! திடீர் திடீர் என்று மார்வலி உண்டாகி நிற்கவும் மாட்டாது தவித்தவாறு அப்படியே சுவருடன் சாய்ந்தாள் !

ஆபீஸை அடைந்த சேகர் நாற்காலியில் உட்கார்ந்து இருக்கிறானே தவிர அவன் எண்ணம் பூராவும் எங்கெங்கோ சென்று அலைந்து கொண்டிருந்தது. தாமுவின் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தான். அந்தக் கடிதத்தில் எல்லா வாக்கியங்களையும்விட, "சேகர்! உனக்கு இருக்கும் ம்ருகாவேகத்தில் நான் உன் வீட்டில் இருந்தால்கூட என்மேல் சந்தேகப்பட்டு சுமதியை இன்னும் துன்புறுத்துவாய்" என்று எழுதியிருக்கும் வாக்யம் அவன் உள்ளத்தை வாள்கொண்டு அறுத்தது. சுமதியை நான் அன்பாய் நடத்தாத காரணத்தினலா என் ஆப்தசினேகிதன் என்னை இவ்வளவு கேவலமாய் மதித்து வெறுக்கிறான் ,....என்று நினைக்கும்போது, ஆபீஸில் தன்னைச்சுற்றி யிருக்கும் மற்ற சிப்பந்திகள் கூட தன்னை ஏளனமாய்ப் பார்த்து நகைப்பது போன்ற ஒரு புதிய தோற்றம் உண்டாகி இன்னும் அங்கு உட்காரக்கூட முடியாது சித்திரவதை செய்தது...... ஆம்! தாமு சொல்வதுபோல் நான் நன்றி கெட்டவன் தான். என் அத்தைக்கு மகாபாதகத்தை விளைவித்து விட்டேன். சுமதி கண் கலங்கினல் கூடப் பார்த்துச் சகியாத அத்தைக்கு ஆத்மா சாந்தியே அடையாதவாறு சதா சுமதியை அழுத கண்ணுகவே வைத்துக் கொடுமைப் படுத்தி விட்டேன். சீ! இப்போதே போய் சுமதியைத் தேற்றி என் இதய பீடத்தில் அமரச்செய்து விடுகிறேன்....என்று பித்தனைப்போல் நினைத்து மானேஜரிடம் சென்று சினேகிதன் வந்திருப்பதாய்ச் சொல்லிவிட்டு ஆவேசம் வந்தவனைப்போல் வீட்டிற்கு ஓடினன். அவன் கால்களோடுவதை விட அவன் இதயம் இன்னும் வேகமாய் சுமதியிடம் சென்றது.

வீட்டிற்குப் போகும் வழியிலேயே கந்தன் ஓட்டமும் நடையுமாம் வியர்வை கொட்ட சேகரின் ஆபீஸை நோக்கி வந்துக் கொண்டிருந்தான், யஜமானரை வழியில் பார்த்ததுமே, "சார்!........சார்!..." என்று ஓடிவந்தான். அவன் முகவாட்டத்தைக் கண்ட சேகர், "கந்தா ! என்ன! என்ன! என்று பரபரப்புடன் கேட்டான். "சார்!...அம்மா திடீர் என்று மார்வலி வந்து தவிக்கிருங்கோ!... ஹா......ஹா... என்று மூச்சுவிட முடியாது திணறுகிருங்க....கண்கள் எல்லாம் சொருகிப்போய் இருப்பதைப் பார்த்தால்பயமாயிருக்குங்க" என்று சொன்னன். இதைக் கேட்ட சேகர் பேசக் கூட முடியாது திணறினன். "சார்! நீங்க வீட்டுக்குப்போய் அம்மாவை கவனிங்க! நான் டாக்டரைக் கூட்டிவருகி

றேன்.'' என்று கந்தன் சென்ன பிறகுதான் உணர்வு பெற்றவன்போல் வீட்டிற்கு விரைந்தான். படி ஏறும் போது தனி உணர்ச்சிமேலிட்டு, "சுமதீ!....சுமதீ!—" என்று கத்தியவாறு ஓடிவந்தான். மார்வலி தாங்காது சுமதி முன கியவாறு தாறுமாருய் விழுந்து கிடந்தாள். அவள் பரிதாப மான தோற்றம் கல்நெஞ்சனுகிய சேகரின் உள்ளத்தைக் கூட உருக்கியது. கண்களில் நீர்பெருகச் சிறு குழந்தை யைத் தூக்குவதுபோல் சுமதியைத் தூக்கிச் சென்று தன் கட்டில்மேல் கிடத்தினன்.

கல்யாணத்தன்று பாணிக்ரஹம் பண்ணிவிட்ட பிறகு சேகரின் ஸ்பரிசமே அறியாத சுமதிக்கு, ஒரே சமயத்தில் அவன் அணைப்பும் அன்பு மொழியும் கேட்டதும், தான் இந்த உலகத்தில்தான் இருக்கிறோமா என்று சந்தேகம் தோன்றியது. "ஹா!.......நிஜமாகவா...நான்.......அவர் அன்பு மொழியை....கேட்கிறேன்!....நான்...பாக்கியசாலி தான்!...கடைசீ சமயத்திலாவது....என் ஆத்மா....த்ருப்தி அடையும்!....அந்தக் காலத்தில்....என் தாயாரின்....ஆதர வும்...அன்பும்...அணைப்பும்...செல்வமும்.......வேண்டியிருந் தது!...ஆனல்...இந்த சுமதிதான்....உங்களுக்குத் தேவை இல்லாது....இருந்தேன்!.........அதுவரை பகவானுக்கு என் மேல் உதாசீனம் இல்லாது இவ்வளவு சீக்கிரம் தன் திரு வடியில் சேர்த்துக் கொள்ளும் பாக்யமாவது செய்தேனே! ...அதுவே போதும்!....இனி வரப்போகிறவளையாவது....... அன்பாய் நடத்துங்கள்!...அதிலேயே என் ஆத்மா...சாந்தி அடையும்"....என்று மூச்சு திக்குமுக்காடத் திணறத்திணற கத்தினுள். சுமதியின் பவித்ரமான உயிர் இந்த நரக உலகத்திலிருந்து சாந்தி உலகத்திற்குச் சிட்டாய்ப் பறந் தது!...

"ஹா!....சுமதி!....இவ்வளவுதான் எனக்கு ப்ராப்தமா? ....ஐயோ உன் உள்அழகை அறியாது இன்றிருந்து நாளை அழியும் வெளி அழகைப் பார்த்து மோசம் போனேனே! ....எனக்கு மறு கல்யாணமா?........சுமதீ!.........ஐயோ சுமதீ! என்று அலறியவாறு சுமதியின் சவத்தின்மேல் விழுந்து புரண்டான்; முட்டிக் கொண்டான். மோதிக்கொண் டான்!....அதிர்ச்சியின் வேகம் சடலத்தின்மேல் மயக்கமாய் விழுந்தான்!

சேகரின் மனப்புயல் சூருவளிபோல் கிளம்பியது. சுமதியின் மனப்புயல் ஓய்ந்து அமைதி நிலையில் கலந்தது.

சுபம்!

# காளிதாஸர் கனவு

## 9, மேக தர்சனம் : மேக சந்தேசம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அவளுக்கு என்னிடமுள்ள அளவற்ற அன்பு எனக்குத் தெரியும். முதற் பிரிவின் தாங்கமுடியாத துயரத்தால் அவள் இப்படி ஆகிவிட்டாள். நான் ஏதோ என் அழகின் பெருமையால் இப்படிக் கூறுகின்றேன் என்று எண்ண வேண்டாம். உனக்கு அவளுடைய நிலே நான் கூறியபடி இருப்பது நன்கு விளங்கும். மை தீட்டாததும் அடிக்கடி மறைக்குங் கூந்தலால் தடுக்கப்பட்ட கடைக்கண் பார்வையுடன் கூடியதுமான அவளுடைய கண்கள் அழகினல் அசையும் தாமரைப் பூக்களை ஒத்திருக்கும். அவளுடைய வாழை போன்ற தொடை துடிக்கும். ஒரு வேளை அவள் உறங்கி என்னைக் கனவில் கண்டு களித்திருக்கும் வேளையாக இருந்தால் அவளை இடிமுழக்கத்தால் விழிக்கச் செய்யவேண்டாம். அவள் விழித்த பிறகு நீ அவள்மேல் நீரால் குளிர்ந்த காற்றை வீசி இடி முழக்கமாகிற சொற்களால் அவளிடம் பின் வருமாறு கூறவேண்டுகின்றேன்.

"நான் உன் கணவனுடைய பிரிய நண்பன், பிரிந்த காதலர்களைச் சேர்த்து வைப்பதில் எனக்கு ஒப்பற்ற இன்பம். பொருளீட்டுவதற்காக தொலேயிலுள்ள நாடுகளுக்குச் சென்றிருக்கும் ஆடவர்களை என் மின்னல் இடி முழக்கங்களால் மனே மனைவி மக்களைக்காண விருப்பமுள்ளவர்களாகச் செய்து வீடு திரும்பும் படிச் செய்வதில் எனக்கு மிக உற்சாகம். அப்படி இருக்கும் பொழுது என் நண்பன் விஷயத்தில் எனக்கு எவ்வளவு ஆவல் இருக்கும் என்று நான் கூறவும் வேண்டுமா? உன் கணவன் என் மூலமாகச் சொல்லியனுப்பிய காதற்செய்தியைச் செவிசாய்த்துக் கேள்!!

உன்னுடைய சொற்களைக் கேட்டவுடன் அவள் அனுமானைக்கண்ட சீதையைப்போல் களித்து உன்னை கௌரவித்து அன்புடன் நிமிர்ந்து நோக்குவாள். பிறகு நீ கூறுவதை கவனித்துக் கேட்பாள். காதலன் செய்தியை நண்பன் உரைப்பதைக் கேட்பதுக் காதலனைச் சந்தித்துத் தழுவதலேவிடக் கொஞ்சம் தான் குறைந்தது.

'காந்தோபாந் தாத்: ஸுஹ்ருதுபகம:
ஸங்கமாத் கிஞ்சிதூன: |

நீ பின்வருமாறு அவளிடம் கூற வேண்டும். "உன்கணவன் ராமகிரியில் புண்ணியமான ஆசிரமத்தில் இருந்து கொண்டு உன் க்ஷேமத்தைக் கோரிக் கொண்டிருக்கின்றான். துன்பங்களால் வாடிவருந்துகின்றவர்களுக்கு இதுதான் முதல் முதலாகக் கூற வேண்டியது.

பூர்வாசாஸ்யம் சுலபவிபதாம்
ப்ராணினு மேததேவா |

அழுது வருந்தி பெருமூச்செறிந்து மெலிந்த அங்கங்களால் உன்னைத் தழுவ விரும்பும் உன் காதலன் பகையுள்ள விதியால் தூரதேசத்தில்உன்னைவிட்டுப்பிரிந்திருக்கும்படிசெய்யப்பட்டான். இறைந்து சொல்லக் கூடிய எண்ணங்களைக்கூட உன்னிடமுள்ள ஆசையால் உன்முகத்தைத் தொட விரும்பி உன்னிடம் நெருங்கி ரகசியமாகக் கூறினானே அவன் தன்னுடைய நன்பனாகிய என் மூலமாக உன்னிடம் அன்பு கனிந்த இம்மொழிகளைக் கூறச் சொன்னான்.

"கொடிகளில் உன் மெய்யழகையும் மான்களுடைய கண்களில் உன் கண்ணழகையும் திங்களில் உன் முகத்தழகையும், மயில் தோகையில் உன் கூந்தலழகையும் ஆற்றின் சிறு அலைகளில் உன் புருவங்களின் அழகையும் தேடிப்பார்த்தும் ஒற்றுமையைக் காணததால் வருந்துகின்றான். காவிக்கற்களால் உன் அழகிய உருவத்தை ஓவியமாகத் தீட்டி உன் விளையாட்டுச்சினத்தைத் தணிக்கத்தான் கெஞ்சுவதுபோல் தன்னை ஓவிய முறையில் சித்திரமெழுத முயற்சித்த பொழுதுத் தடுக்கும் கண்ணீரால் ஓவியத்தை முடிக்க முடியாமல் விதியின் தடையால் அவன் வருந்தி நிற்கின்றான். கனவுகளில் உன்னைக் கண்டுத் தழுவ முயற்சித்துக் கைகளை ஆசையுடன் நீட்டும் பொழுது அவனுடைய பரிதாபமான நிலைமையைக் கண்ணுற்ற வனதேவதைகளும் பனித்துளிகள் மூலமாகக் கண்ணீர் வடிக்கின்றார்கள். இமயமலையிலிருந்து தேவதாரு மரங்களின் தளிர்களைத் தொட்டு அசைத்து அவைகளிலிருந்து பெருகும் மணமுள்ள பாலின் சேர்க்கையால் மணங்கமழும் காற்றுத் தென் திசையை நோக்கி வீசும் பொழுது அது உன்னைத் தொட்டு வந்திருக்குமோ என்ற மோகத்தால் அதை ஆசையுடன் தழுவிக் கொள்ளுகின்றான். இரவு ஒரு கணம்போல் மறுபடி எப்பொழுது போகும், பகல் எப்பொழுது வெப்பமின்றி குளிர்ச்சியாக இருக்கும்!என்று ஏங்கி உன்னை விட்டுப் பிரிந்த துயரத்தின் வெப்பத்தால் வருந்தி எண்ணமிட்டுக் கொண்டிருக்கின்றான். காதலி! வருந்தாதே! எண்ணத்தின்மேல் எண்ணமிட்டுக் கொண்டு இருக்கும் நான் என்னை முடிந்த வரையில் தைர்யப்படுத்திக் கொண்டிருக்கின்றேன். நீயும் வருந்தாமலிரு, யாருக்குத்தான் மாருத இன்பமோ துன்பமோ வருகின்றது? ஒவ்வொருவரும் சகடக்கால் போலவே மேலும் கீழுமாகச் சென்று கொண்டிருக்கின்றார்கள்."

**கஸ்யாத்யந்தம் சுகமுபநதம் துக்க மேகாந்ததோவா**
**நீசைர்கச்ச த்யுபரிசதசாச் சக்ரநேமிக்ரமேண |**

ஆதிநாராயணன் தன்னுடைய யோகநித்திரையிலிருந்து எழும் பொழுது எனக்கு ஏற்பட்ட சாபம் முடிவடையும். அது வரையில் உள்ள நான்கு மாதங்களைக் கண்களை மூடிக்கொண்டுப் பொறுத்துக்கொள். அதற்குப்பிறகு வெண்ணிலா நிறைந்த இரவுகளில் நாமிருவரும் பரமானந்தமாக பிரிவில் எண்ணப்பட்ட இன்பங்களை நுகர்வோம், என்னைத் தழுவி உறங்கும் வேளையில் நீ எழுந்திருந்து "வேறு எந்த மாதையோ விரும்பி என்னை

விட்டுப்போவதாகக் கனவு கண்டேன்'' என்று உட்சிரிப்புடனும் வெளியழகுடனும் நீ கூறுவாய். இப்படி நான் கூறிய அடையாளங்களிலிருந்து என் அன்பு எப்படி இருக்கின்றது நான் எப்படி உயிர்வாழ்கின்றேன் என்று அறிந்து யார் எதைக் கூறினலும் உனக்கு என்னிடம் இருக்கும் உள்ளன்பு குறையக் கூடாது. பிரிவால் காதல் குறையும் என்பது தவறு, பிரிவால் காதல் வளர்ச்சி யடைகின்றது என்பதுதான் திண்ணம்.''

ஸ்னே ஹாநாஹு: கிமபிவிரஹே
ஹ்ராஸின ஸ்தேஹ்யபோகாத்
இஷ்டே வஸ்துன்யுபசித ரஸா:
ப்ரேம ராசீபவந்தி

"இப்படி முதற் பிரிவால் மிகவும் வருந்தும் அவளைத்தேற்றி ஆறுதலை அளித்து அவள் கூறும் மறுமொழிகளை என்னிடம் உரைத்து என் உயிரைக்காக்கும்படி உன்னை வேண்டுகின்றேன். இந்த அன்புள்ள தூது வேலையை நீ செய்வாயா? நீ மறுமொழி கூருததால் நீ கம்பீரமாக அசட்டையாக இருப்பதாக நான் நினைக்கவில்லை. நீ மௌனமாகவே சாதகப்பறவைகளுக்கு நீரளிப்பதால் உன் மௌனமே சம்மதமென்று நான் கருதுகின்றேன். பிரியமான பதிலைக் காட்டிலும் பிரியமான உபகாரமே உயர்ந்தது.

நிஸ்ஸப்தோஹி ப்ரதிசஸிஜலம்
யாசிதஸ் சாதகேப்ய:
ப்ரத்யுக்தம் துப்ரணயிஷு ஸதாமீ
ப்ஸிதார்த்த க்ரியைவ ||

என்வேண்டுகோளுக்கு இணங்கியாவது அன்பாலாவது, கருணையாலாவது இந்த உபகாரத்தை எனக்குச் செய்து நீ உன் மனைவி மின்னலுடன் எப்பொழுதும் பிறிவின்றி கூடி ஆனந்தமாக இருக்கும்படி இறைவனை இறைஞ்சுகின்றேன்''

குமாரதாஸா! நான் மேக சந்தேசத்தின்சாரத்தைக்கூறியதில் நீ ஒரு முக்கியமான உண்மையை அறிய வேண்டும். தூய்மையானதும் உணர்ச்சி நிறைந்ததுமான உள்ளமே தெய்வீக வாழ்க்கையாகும். சந்திர கலையைப் பிரிந்து தவிக்கும் எனது உள்ளம் ஏன் விப்ரலம்ப சிங்காரத்தை (பிரிவில் ஒளி வீசும் காதலை) மேன்மையாக விரிவாக வர்ணிக்கின்றது என்று நான் கூறவும் வேண்டுமா? நான் அளகாபுரியைப் பற்றிக் கூறிய வர்ணனை இந்த அழகிய புனிதமான பாரதநாட்டிற்கே பொருந்தும்,

ஸ்வல்பீபூதே ஸுசரிதலே ஸ்வர்கிணும் காம் கதானும்
சேஷை: புண்யை ர்ஹ்ருதமிவ காந்திமத் கண்டமேகம்

இந்தப் புண்ணிய தேசத்தில் அன்பு நிறைந்த வாழ்வே வாழ்வு.

ஸ்னேஹானஹு: கிமபிவிரஹே
த்வம்ஸின ஸ்தேத்வபோகாத்
இஷ்டே வஸ்துன்யுபசித ரஸா: ப்ரேம ராசீவபந்தி |

(தொடரும்)

பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு குறிப்பு

# "காக்கைச் சிறகினிலே"

ஸ்ரீமதி சின்ன ரங்கா

காலை வேளை (இடம் கடற்கரை, சகுந்தலா, பாரதி, ரங்கா மூவரும் மணல் மேல் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

சகு: நீ எப்போது. எழுந்திருந்தாய் ரங்கா?

ரங்: நான் காலை 5 மணிக்கே எழுந்து ஸ்னானம் செய்துக் கொண்டுவிட்டு ஏதோ ஒரு ஹாஸ்ய கதையை படித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்கள் வந்தீர்கள், உங்களோடு வந்து விட்டேன்.

சகு: அது என்ன கதை சொல்லு.

ரங்: ஒரு பங்ளாவின் எஜமானன் தன் வேலைக்காரனை கூப்பிட்டு "நாளைகாலையில் இரட்டைக்காக்காய் உட்கார்ந்ததை பார்த்தவுடனேயே என்னை எழுப்பு. அதை எழுந்தவுடன் பார்த்தால் ரொம்ப நல்லது என்று யாரோ பெரியவர் சொன்னார்" என்று கட்டளையிட்டான். மறுநாள் காலையில் ஜோடிக் காக்காய் உட்கார்ந்ததை பார்த்த வேலைக்காரன் தன் எஜமானனை எழுப்பினான். எஜமானன் வெளியில் வந்து பார்த்த போது அங்கு ஒரே காக்காய்தான் இருந்தது. அவனுக்கு வெகு கோபம் வந்து வேலைக்காரனை நன்றாய் அடித்து விட்டான். வேலைக்காரன் அழுதுக்கொண்டே எஜமானனைப் பார்த்து "பிரபுவே நான் முதலில் ஜோடிக் காக்காயை பார்த்த பலன் எப்படி இருக்கிறது பாருங்கள்" என்றான். அதைக் கேட்ட எஜமானன் வெட்கி தலைகுனிந்து கொண்டானாம். இதுதான் கதை. நாம் காக்காயைப் பார்த்தால் கெட்டதோ என்னமோ-யாருக்குத் தெரியும்.

சகு: (பாரதியைப் பார்த்து) அப்பா! காக்காயைப் பார்த்தால் கெட்டதாகுமா நல்லதாகுமா!

பார: எல்லாம் நல்லதுக்குத் தானம்மா. காக்காய் கத்தினால் தான் மெக்கு பொழுது விடிவது தெரிகிறது. அதுபார் எவ்வளவு பளபளப்பாயும் சுறுசுறுப்பாயும் இருக்கிறது. சிகப்பான வாயை திறந்து பேசுவதே ஒரு அழகாய் இருக்கிறது அது கண்ணனுடைய நிறத்தைக் கொண்டு பிறந்திருக்கிறது. அவன் எல்லா பறவைகளிடமும் செடி மரங்களிலும் தன்னுடைய நிறத்தைகாண்பித்திருக்கிறான். ஆனால் நமக்கு அதில் சிரத்தை காண்பிக்க இஷ்டம் வருகிறதில்லை. எங்கோ கண் மறையான வஸ்துவை நினைத்து பிரார்த்தனை செய்வது ஜனங்களின் சுபாவம். எதிலும் கண்ணன் இருப்பான் இந்த இயற்கை எல்லாவற்றையும் மனதில் சேர்த்து வைத்து மனக் கண்ணில் பார்த்தால் நேராய் கண்ணனைப் பார்ப்பதுபோல் இருக்கும்.

சகு: அதை எப்படி அப்பா நினைப்பது.

**ரங்: நீர் சொல்வது ரொம்ப அதிசயமாய் இருக்கிறதே. எப்படி அதுகளை சேர்த்து கண்ணாய் நினைப்பது என்பதை விலக்கி சொல்லுவீரா?**

பாரதி (பாடுகிறார்)


1. காக்கைச் சிறகினிலே-நந்தலாலா நின்றன்
   கரிய நிறந் தோன்று தையே—நந்தலாலா
2. பார்க்கு மரங்களெல்லாம் நந்தலாலா - நின்றன்
   பச்சை நிறம் தோன்றுதையே - நந்தலாலா
3. கேட்கும் ஒலியிலெல்லாம் - நந்தலாலா-நின்றன்
   கீதமிசைக்குதடா நந்தலாலா
4. தீக்குள் விரலைவைத்தால் - நந்தலாலா - நின்னைத்
   தீண்டுமின்பம் தோன்றுதடா நந்தலாலா

**"பாப்பா! இப்போது எல்லாத்தையும் சேர்த்து நினைக்க உன்னால் முடியுமா பாருங்கள் அவன் எல்லா இடங்களிலும் எல்லாவிதமாயும் இருப்பான்".**

**ரங்: நீர், ஐயர் எங்கப்பா எல்லாரும் அரவிந்தகோஷ் வீட்டில் உபநிஷத்துகளைப் பற்றி என்னமோ பேசிக்கொண்டிருப்பீர்களே அது யாரைப் பற்றினதாய் இருக்கும்.**

**பார: உபநிஷத்து, நாலாயிரம் பகவத்கீதை எல்லாம் அவன் ஒருவனைப் பற்றியே. அதுகளில் விதவிதமானபாவனைகள் உண்டு. உங்களுக்கு அவ்வளவு பெரிய விஷயங்களைச் சொன்னால் புரியாது. நீங்கள் இதையே நன்றாய் மனதில் பதிய வைத்துக்கொண்டால் பெரியவர்கள் ஆனாலும் ஒவ்வொரு வேளையிலும் தானாகவே நினைவு வந்து எல்லாம் விளக்கிக் காட்டும். வாருங்கள் வீட்டுக்குப் போகலாம் வெய்யில் ஜாஸ்தியாய் விடும்.** (எல்லோரும் வீடு போய் சேருகிறார்கள்)

---




சம்பத்:—ஐயா! சந்தானம் என்கிற உம்முடைய பெயர் பொருத்தத்தை இன்றுதான் ப்ரத்யக்ஷமாய் பார்க்கிறேன் ஹீ...ஹீ....

சந்தானம்:—சம்பத்து என்று பெயர்வைத்துக்கொண்டு நீர் அஷ்டதரித்[illegible] நான் இல்லை.



183205

# ஹிந்துசட்ட மாறுதல்கள்

ஸ்ரீமான். P. M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B. A., M. L.,
(Retd. Dist. Judge.)

**ஹிந்து விவாகாதிகளைப்பற்றிய தர்மசாஸ்திரங்களும், அவைகளில், இந்தியா தேசத்து பார்லிமெண்டினுல் அங்கீகரிக்கப்பட்ட மாறுதல்களும்.**

நமது தேசம், ஸ்வாதந்தர்யம் அடைந்த பின்னர், மாகாணத்து சட்டசபையாலும், கேந்திர சட்டசபையாகிய பார்லிமெண்டினுலும், ஜனங்களுடைய விவாகாதி ஸம்ஸ்காரங்களில் பல மாறுதல்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அத்தகைய மாறுதல்கள் இத்தேசத்து ஹிந்துக்களைப் பற்றியனவாகும். விவாகம், அவிபக்த குடும்பதாய விபாகம், சொத்து அடையும் வார்ஸைத்வகிரமம், ஸ்திரீதனம், தத்தஸ்வீகாரம் முதலிய விஷயங்களில் விசேஷமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. பொதுமக்கள் எல்லோரும் இவைகளைச் சரியாக அறிந்து, தங்கள் தங்களுடைய உரிமைகளை அநுசரித்து பிரவர்த்திக்க வேண்டியது அவசியம்.

இப்பொழுது விவாகத்தைப் பற்றி விசாரிப்போம்: தர்மசாஸ்திரப்படி, விவாகம், எட்டுவகைப்பட்டது: 1. பிராஹ்மம்; 2. தைவம்; 3. ஆர்ஷம்; 4 பிராஜாபத்யம்; 5. ஆசுரம்; 6. காந்தர்வம்; 7. ராட்சஸம்; 8. பைசாசம், என்று.

வேதாத்யயனம் செய்து ஆசாரவானுயிருக்கும் ஒரு பிரஹ்மசாரியைத் தானகவே கூப்பிட்டு மரியாதை செய்து, தன் அலங்க்ருத கன்னியை அவனுக்குக் கொடுத்து மணம் செய்விப்பது பிராஹ்மம் ஆகும். ஜ்யோதிஷ்டோமம் முதலிய யஜ்ஞங்களைச் செய்விக்குமவனுக்குக் கன்னிகையைக் கொடுப்பது தைவம் எனப்படும். யாகசித்திக்காகவோ அல்லது கன்னிகைக்குக் கொடுப்பதற்காகவோ வரனிடத்திலிருந்து ஒரு கோ மிதுனத்தையோ, இரண்டு காளைமாடுகளையோ பெற்றுக் கொண்டு, அவனுக்குக் கன்னிகையைத் தானம் செய்வது ஆர்ஷவிவாகம் என்று சொல்லப்படும். 'நீங்கள் இருவர்களும் சேர்ந்து தர்மம் அநுஷ்டிக்க வேண்டும்' என்று கன்னிகையின் தாய் தந்தைகள் வரனைப்பூஜித்துப் பெண்ணைக் கொடுப்பது பிராஜாபத்யம். ஞாதிகளுக்கும் பெண்ணுக்கும் வேண்டிய தனத்தைக் கொடுத்து மணம் புரிவது ஆசுரவிவாகம். ஸ்திரீபுமான்கள் இருவரும் அபேக்ஷித்து ஸம்மதத்துடன் சேர்ந்தால், அது காந்தர்வம். கன்னிகையின் பந்துக்கள் இஷ்டமில்லாதபோது அவர்களை ஹிம்ஸித்து, வருந்திக் கொண்டிருக்கும் பெண்ணை பலவந்தமாகக் கொண்டுபோய் மணம் புரிவது ராக்ஷஸவிவாகம். தூக்கத்திலேயோ, மூர்ச்சையிலோ, வஞ்சனையினுலோ

பெண்ணுடன் கிரீடிப்பது பைசாச விவாகம். இந்த விவாரங்களை மநுஸ்ம்ருதி 3-வது அத்யாயம், 20 முதல் 30 சுலோகங்களில் காணலாம்.

இப்பொழுது அநுஷ்டானத்தில் இருக்கும் விவாகங்கள் இரண்டு மாத்திரம்தான்: அவை பிராஹ்மமும் ஆசுரமும். கன்னிகையின் தாய் தந்தைகள் அல்லது பந்துக்கள் வரனிடத்திலிருந்து தனம் பெற்றுக்கொண்டு பெண்ணைக் கொடுத்தால் அது ஆசுரமென்றும் அப்படியல்லாதது பிராஹ்மம் என்றும் வழங்கப்படும். மற்ற ஆறு விதமான விவாகங்கள் வெகுகாலமாக வழக்கத்தில் இல்லை. மேலும், அப்படிப்பட்டவை அரசாங்க சட்டத்திற்கும் விரோதம். வரன் தண்டனைக்கும் பாத்திரனவான். முற்காலத்தில் இவைகளையும் விவாகங்களாகப் பரிகனித்ததற்குக் காரணம் எந்த விதத்திலேயாவது சேர்க்கை ஏற்பட்டால் அது விவாகமாகும் என்ற நினைவு. பிராசீன காலங்களில் அவைகள் ஆங்காங்கு நடந்து வந்திருக்கக்கூடும் என்பது நமது புராணங்களினுல் வெளியாகும். பண்டைய காலத்து ஸ்திதிகளை யோஜித்துப் பார்த்தால் ஷை ஹீனகிரியைகளை விவாகங்களாக ஆதரித்து அக்காலத்திய ஸ்ம்ருதிகர்த்தாக்களுடைய விசாலமான நோக்கத்தைக்குறிக்கும் என்று சொல்லலாம்.

பண்டைக் காலத்தில் விவாக நிர்ப்பந்தங்கள் பலவாக இருந்தன:—

1. ஒருவன் தன் வர்ணத்தை மீறி வர்ணாந்தரத்திலிருந்து பெண்ணை மணம் செய்து கொள்ளகூடாது.

2. தன் வர்ணத்திலும் அதில் தானுள்ள வகுப்பிலே தான் பெண்ணை மணக்கலாம்.

3. ஸகோத்திர ஸமான ப்ரவரங்கள் நிஷேதம்.

4. வதூவராள் புருஷக்ரமத்தில் மேல் ஏழு தலைமுறைக்குள் இருந்தால் அவர்கள் பரஸ்பரம் விவாகத்துக்குத் தகுதியற்றவர்கள்.

மேற் கூறிய நான்கு விஷயங்களிலும் பலமாறுதல்கள் ஏற்பற்டிருக்கின்றன:

**1946**-ம் வருஷத்திய 28-வது நம்பர் சட்டப்படிக்கு ஏகவர்ணத்திற்குச் சேர்ந்து, வெவ்வேறு கிளைகளில் உள்ள வதூ வராள் மணம் செய்துகொள்ளலாம்.

**1949**-ம் வருஷத்திய 21-வது நம்பர் சட்டத்தின்படி, வர்ணங்கள் வெவ்வேருக இருந்தாலும், விவாகம் சரியானதாகும்.

[ஆதலால், ஹிந்துக்களில் ஹரிஜனங்கள், புத்த, ஜைனமதஸ்தர்கள், சீக்கியர்கள் வர்ண வகுப்பு நிர்ப்பந்த

மில்லாமல் கல்யாணம் செய்துகொள்ளலாம். அது சட்ட அங்கீகாரத்தைப் பெற்றதாகும்.]

வதூ வராள் ஒரே கோத்திரத்தில் இருந்தாலும், ஸமானப்ரவரத்தை யுடையவர்களாக இருந்தாலும் அவை விவாகத்திற்குப் ரதிபந்தங்கள் ஆகா. இது மேற் கூறிய 1946-வது வருஷத்திய 28-வது நம்பர் சட்டத்தில் ஸ்திரப் படுத்தப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் நமது தேசத்திய பார்லிமெண்டார் 1955-வது வருஷத்திய 25-வது நம்பர் சட்டம் ஏற்படுத்தியிருக் கிறார்கள். அதற்கு ஹிந்து விவாக சட்டம் என்று பெயர். இதுதான் இப்பொழுது ஹிந்துக்கள் எல்லோரையும்கட்டுப் படுத்தும் சட்டம். ஆதலால் அதன் விவரங்களை பொதுமக் கள் நன்றாகக் கவனிக்க வேண்டியது அவசியம். அந்தச் சட்டத்தின் 5-வது பிரிவில், ஹிந்து விவாகத்திற்கு இருக்க வேண்டிய நிபந்தனைகள் கீழ்வருமாறு சொல்லப்பட்டிருக் கின்றன :—

ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும் விவாகம் செய்து கொள்ள வேண்டுமானால்,

(i) ஸ்திரீக்கு வேறு புருஷனோ, புருஷனுக்கு வேறு ஸ்திரீயோ அப்பொழுது ஜீவித்திருக்கக்கூடாது.

(ii) அவ்விருவர்களில் யாரும் பயித்தியம் பிடித்தாவது புத்தி இழந்தவர்களாகவாவது இருக்கக் கூடாது.

(iii) புருஷனுக்கு 18வயதும் ஸ்திரீக்கு 15வயதும்நிரம்பி யிருக்கவேண்டும்.

(iv) நிஷேதிக்கப்பட்ட ஒரே புருஷதலைமுறை வரிசை குள் அவர்கள்வரிசை இருக்கலாகாது. அதாவது வதூவரர் களில் ஒருவர் மற்றவர்க்கு நேர்வரிசையில் மேல் தலைமுறை யில் இருக்கக் கூடாது.(இந்த 1955-ம் வருஷத்திய நம்பர் 25-வது சட்டத்திற்கு முன், புருஷன் தன் தந்தை வம்சத்தில் ஏழு தலைமுறைகளிலும் தன் தாய் வம்சத்தில் ஐந்து தலை முறைகளிலும் சேர்ந்தவளாக வதூ இருக்கக்கூடாது.)

இருவர்களில் ஒருவர் மற்றொருவருடைய வம்சத்தில் மேல் தரத்திலாவது கீழ் சந்ததியிலாவது உள்ளவருடைய மனைவியாகவாவது, புருஷனாவாவது இருக்கக் கூடாது. (இந்த ஷரத்து விதந்து விவாகத்தை உத்தேசித்தது.)

மேலும், ஸ்திரீ, வரனுடைய உடன் பிறந்தவனுக்கோ அல்லது தன் தகப்பனுடன் பிறந்தவர்களுக்கோ அல்லது அம்மானுக்கோ அல்லது தன் பிதா மகன்.—பிதாமகிகளு டைய சகோதரனுக்கோ மனைவியாக இருந்திருக்கக் கூடாது.

வதூவரர்கள் கூடப்பிறந்தவர்களாகவாவது, மாமன் மருமகனாகவாவது, அத்தை மருமகனாகவாவது,

சகோதரன் சகோதரிகளுடைய மக்களாகவாவது இருக்கக் கூடாது.

புருஷனிடமிருந்து அவன் தகப்பன்—பாட்டன்முதன் மூன்னோர் 5 தலைமுறை வரையிலும், தாயிடமிருந்து மேல் மூன்று தலைமுறை வரையிலும் ஸபிண்டமாகும்.

(V) வதூ வராள் ஒருவருக்கு ஒருவர் ஸபிண்டர்களாக இருக்கக்கூடாது.

(vi) விவாகமாகும் சமயம் வதூவுக்கு 15 வயதுக்கு மேலும் 18 வயதும் நிரம்பாமல் மைனரா இருந்தால், அவளுடைய கார்ட்டியன் அதாவது ஸம்ரட்சண கர்த்தா விவாகத்திற்கு சம்மதிக்க வேண்டும்.

புருஷனுக்கு 18 வயது நிரம்பாமல் கல்யாணமே ஆகக் கூடாது, அப்படி ஆனல், அது சட்டத்திற்கு விரோதமாகும்! அது குற்றமாகும். ஆனல் பெண் மைனராக இருக்கும் போதே கல்யாணமாகலாம். மைனர்தீர்ந்து மேஜராகுவது 18 வயது நிரம்பினவுடன். 18 வயது ஆன பெணகள் தாமே ஸ்வதந்திரர்களாக விவாகம் செய்துகொள்ளலாம். 15,18வயது நடுவிலிருக்கும் பெண்ணை அவள் ஸம்ரக்ஷண கர்த்தாவின் அநுமதியிருந்தால்தான் ஒருவன் மணம்புரியலாம். அவளுக்கு இவ்விஷயத்தில் அநுமதி கொடுக்கக் கூடிய சம்ரட்சகர்கள் வரிசையாக,

(a) தந்தை, (b) தாய், (c) பிதாமஹன், (d) பிதாமஹி,

(e) ஒரே தாய் தந்தைகளுக்குப் பிறந்த சகோதரன். ஒன்றுக்குமேல் சகோதரர்கள் இருந்தால், அவர்களில் மூத்தவன்.

(f) ஒரே தந்தைக்கும் வெவ்வேறு தாய்மார்களுக்குப் பிறந்த சகோதரர்களாக இருந்தால், அவர்களில் மூத்தவன்; (அப்படிப் பட்டவனுக்கு அநுமதி கொடுக்கும் அதிகாரம்-வது-அவனிடமிருந்து ஸம்ரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும்.)

(g) தந்தையுடன், ஒரே தாய் தந்தைகளுக்குப் பிறந்த சகோதரன்; (அவர்கள் பலர் இருந்தால், அவர்களில் மூத்தவன்.)

(h) ஒரே தகப்பனுக்கும் வேறு தாய்க்கும் பிறந்த சகோதரன். (அவர்களில் பலர் இருந்தால் மூத்தவன்.) (அநுமதி கொடுப்பவருடன்—வது—இருந்து சம்ரட்சிக்கப்பட்டு வரவேண்டும்.

(i) மாதாமஹன்; (j) மாதாமஹி;

(k) வதூவின் தாயாருடன் ஏககர்ப்ப ஜனிதனை சகோதரன்; (ஒன்றுக்கு மேல் இருந்தால் மூத்தவன்.)

மேற் சொன்னவர்களில் ஒருவன் இல்லாவிட்டாலும், அநுமதி கொடுக்கும் ஸ்திதியில் இல்லாவிட்டாலும் அவனுக்குக் கீழ் அடுத்தவர் அநுமதி செய்யலாம். (தொடரும்)

# மீனா யாருக்கு...?

✽

கமலாவிற்கும், மீனாவிற்கும் பள்ளிப்படிப்பு முடிந்து பல வருஷங்கள் ஆன போதிலும் அவர்கள் அன்புக் கயிர் அறவே இல்லை. மீனாவைவிட கமலா பணக்காரியாக இருந்தாலும் அவர்கள் அன்பில் கடுகளவும் வித்தியாசமே இல்லை. கர்வப்படாமல் கமலா வீட்டவர் மீனா வீட்டவர்களுக்கு அரிசி, பருப்பாகவும், துணிமணி, சில்லறை, போல் பல விதத்திலும் உதவி வந்தனர். இரு குடும்பங்களுக்கிடையே அன்பு விருக்ஷம்போல் வளர்ந்தது.

கமலாவின் தாய், தந்தையரை குணத்தில் தங்கக்கம்பி என்றே கூறலாம். அவர்கள் பிள்ளை—கமலாவின் அண்ணன்—மணிக்கு சிறிய வயதிலேயே இளம்பிள்ளை வாயுவு வந்து ஒரு கால் ஊனமாகி விட்டது, இந்த ஒரு குறைதான் அவர்களுக்கு. ஆனாலும் 'மணியை படிப்பில் யாரால் வெல்ல முடியும்' என்று ஊர் பேசுவதை அவர்கள் காது கேட்க ஆரம்பித்ததும் அந்தக் குறையும் மறையத் தொடங்கியது. குடும்பம் குதூகலமாகத் திகழ்ந்தது.

ஆனால்....முப்பது வருடம் வாழ்ந்தார் இல்லை. முப்பது வருடம் கெட்டார் இல்லை என்ற பழமொழி வீணாகி விடுமா? ஒருநாள் திடீரென்று கமலாவின் தாயார் மாரடைப்பினால் மண்ணுலகை நீத்தாள். கமலா கதறினாள். தந்தையும் மணியும், கல்லாய் விட்டனர். குடும்பமே கொந்தளித்தது துக்கத்தால்.

மீனாவும், அவள் தாயாரும்தான் கமலாவிற்கு தேர்தல் கூறி வீட்டு காரியங்கள் முதற்கொண்டு உதவிசெய்தனர். தாயார் போனாலும், மீனா குடும்பத்தின் அரவணைப்பினால் அந்த துக்கத்தையும் மறந்தாள். மீனா வீட்டோடு இருப்பதில் ஒரு நிம்மதி. நாட்கள் நகர ஆரம்பித்தன.

துக்கம் விசாரிப்பதற்கு வருகிறவர்களது தொகை இன்னும் குறையவில்லை. வருகிறவர்களது வாய் பேசாமல் இருக்குமா? "ஏம்பா! உனக்கு என்ன வயதாகி விட்டது. உன் பெண்ணும் கல்யாணமாகி போய்விட்டால், வீட்டில் ஒரு பெண் வேண்டாமா உங்களை கவனித்துக் கொள்ள? உன் நொண்டி பிள்ளைக்குயார் பெண்ணைக்கொடுப்பார்கள்? பேசாமல் நீ ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்துக் கொள். வேண்டிய பெண்கள் இருக்கிறார்கள். என்ன? யோசித்து சொல். நாளை வருகிறேன்" என்றுபேச ஆரம்பித்தனர். ஊர் வாயை மூட யாரால் முடியும்.

இந்த வார்த்தைகள், வீட்டிலேயே இருக்கும் கமலாவின் காதில் விழாது இருக்குமா? விழத்தான் செய்தது.

அவர்கள்தான் சொன்னால் நம் அப்பா அவ்வளவு சுலபத்தில் மாறிவிடுவாரா என்ற தைரியத்தில் சில நாட்கள் பேசாமல் இருந்தாள். பலன் என்னவென்றால் ஒருவராக வந்து தூபம் போடுவதுபோக நான்குபேராக எண்ணிக்கைதான் அதிகரித்தது. அவர்கள் கூறுவதற்கு டாண் என்று பதில் கூறாமல், 'ஆகட்டும்'என்று தலையை ஆட்டிக்கொண்டிருந்த தினால்கமலாவிற்கு அவள் தந்தை மேலிருந்த நம்பிக்கை குறைய ஆரம்பித்தது.

இப்படியே ஒரு நாள் காலையில், அந்தத் தெருவில் இருந்த சிலர் வந்து இந்த விஷயத்தைப் பற்றி பேசிக்கொண்டிருந்தனர். எதற்கும் இதை மணிக்குத் தெரிவித்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் மாடிக்குச் சென்றாள். மணி கட்டிலில் படுத்து நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். கதவருகிலேயே நின்றுகொண்டு யோசனை செய்தாள். 'பாவம் ஆபீஸில் 'நைட் ட்யூடி' செய்த களைப்பு இன்னும் தூங்குகிறான். எழுப்புவதா வேண்டாமா? சரி கதவைத்தட்டி ஓசை செய்யலாம் எழுந்துகொண்டால் விஷயத்தைச் சொல்வது. இல்லாவிடில் பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று கதவைத் தட்டினாள்.

கதவருகில் கமலா நிற்பதைக் கண்டதும் மணி "என்ன கமலா! எதற்கு தட்டினாய். நேரமாயிற்று என்று என்னை எழுப்ப வந்தாயா நான் தூங்க வில்லை, விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன்" என்றான்.

அருகில் வந்த கமலா "உன்னை எழுப்பதான் தட்டினேன். பாவம்! உன் தூக்கம் கலைந்து விட்டது இல்லை... ஆனாலும் ஒரு முக்கியமான விஷயம்." என்று கூறி நிறுத்தினாள். பிறகு "அப்பாவை யார் யாரோ வந்து நீ இரண்டாம் கல்யாணம் செய்துக்கொள். அப்போதுதான் நல்லது என்று பலவாறாக தூபம் போடுகிறார்கள். அப்பாவின் மனதும் கலைந்து கல்யாணம் செய்து கொண்டுவிட்டால் நம் கதி...

"அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது. நான் பார்த்துக் கொள்கிறேன்"

"உனக்கு ஒன்றும் தெரியாது மணி! அப்பா கல்யாணம் செய்து கொண்டுவிட்டால் அவள் எப்படி இருப்பாளோ. நான் கல்யாணமாகி வேறு வீடு போய் விடுவேன். ஆனால் நீ? இளையாளே படுத்துவாள். அதுவும் உன்னிடம் ஊனம் இருக்கிறதே....என்ன செய்வாளோ"

"நீ பதறாதே. அப்படி நடந்தால் என்ன? என்னிடம் படிப்பு, வேலை இருக்கிறது. ஏன் பயம். நாம் தனியாகப் போய் விடலாம். உன்னை ஒரு நல்ல இடமாகப் பார்த்து கல்யாணம் செய்து கொடுத்து விடுகிறேன். பிறகு என்பாடு"

"அது என்னவோ. நீ எதற்கும் வந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுதான் பாரேன். மீனாவிடம் இதைச் சொல்லி யோசனை கேட்க வேண்டும்"

"சீ!சீ! வெளியாரிடம் நம் வீட்டு விஷயங்களைச் சொல்லக்கூடாது"...என்றவாறு அவர்கள் பேசுவதைக் கேட்க ஒரு மறைவான இடத்துக்குப் போயினர். பேசவந்தவர்கள் போனதும் அவரவர் தங்கள் வேலையை கவனிக்க ஆரம்பித்தார்கள்.

அப்போதுதான் "கமலா!" என்றவாறு மீனா வந்தாள். 'மீனாவிடம் சொல்லலாமா'....என்ற குழப்பத்துடனேயே "வா மீனா!" என்றாள் உப்பு சப்பில்லாமல்.

"கமலா! ஒரு மாதிரியாக இருக்கிறாயே? என்ன விஷயம்? என்னிடம் சொல்லலாமா?"

"உன்னிடம் சொல்லாமலா? உட்கார் சொல்கிறேன். என் அப்பாவை யார் யாரோ வந்து இரண்டாம் கல்யாணம் செய்துக் கொள் என்று தூபம் போட்டு மனதைக் கலைக்கிறார்கள். அவர் மனது எங்கு மாறிவிடுமோ என்று பயமா யிருக்கிறது. எங்களைப் பாடு படுத்துவது ஒரு புறம் இருக்கட்டும். மலைபோல் பிள்ளையும், குதிர்போல் பெண்ணும் இருக்கையில் மறு கல்யாணம் செய்துக்கொள்ள அப்பாவிற்கே வெட்கமாக இருக்காது! என்னைப்பற்றி கவலையில்லை. சாதுமணி, அதுவும் ஊனமான அவனை என்ன பாடு படுத்துவாளோ. நினைக்கும்போதே கண்ணீர் வருகிறது மீனா! என்ன வழி செய்வது சொல்லேன்"

"இவ்வளவு பெரியவளாயிருந்து அழுகிறாயே. நான் ஒரு வழி செய்கிறேன். உனக்கு வேண்டியது சாதுவான நல்ல சித்திதானே. நீ கவலைப் படாதே" என்று தேற்றிவிட்டு, பல காரியங்களையும் செய்துவிட்டு வீடு திரும்பினாள் மீனா.

மாலையில் மீனாவின் தாயார், "கமலா! நான் ஒரு செய்தி சொல்லப் போகிறேன். அது உனக்குப் பிடித்தமானதா? இல்லையா? என்பதை ஒரேப் பேச்சில் சொல்லிவிட வேண்டும்" என்ற பீடிகையுடனேயே வந்தாள்.

"என்ன மாமி! பீடிகை பலமாக இருக்கிறதே. சொல்லுங்கள்" என்று மேலுக்குப் பேசினாளே தவிர, உள்ளுக்குள் 'காலை மீனா பேசியதிலிருந்து ஒரு வேளை அவளே எனக்காக அப்பாவை கல்யாணம் செய்து கொண்டு விடுவாளோ. பாவம் என் வயது ஒத்தவளாயிற்றே' என்று குழம்பிக் கொண்டிருந்தவளுக்கு மீனா தாயாரின் பீடிகை சந்தேகத்தை அதிகமாக்கியது.

உடனே எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் "ஐயோ! வேண்டாம் மாமி! வேண்டவே வேண்டாம்"


என்று கத்தி விட்டாள். விஷயம் புரியாத மீனுவின் தாயார், "கமலா! ஏன் கத்துகிறாய். உன் அம்மாகூட இறக்கும் போது என்னிடம் கூறினாள். அதனால்தான் நான் துணிவாகச் சொல்ல முன்வந்தேன். சொல்வதைக் கேள்.

எங்கள் மீனுவை மணிக்குக் கொடுக்கலாம் என்று தீர்மானம் செய்திருக்கிறோம். அவளுக்கும் பூரண சம்மதம். ஆனால் உங்களது சம்மந்தத்திற்கு லாயக்கற்றவர்கள் தான், இருந்தாலும் நீ ரொம்ப வருத்தப்படுவதாக மீனு சொன்னாள். உங்களுக்குச் சம்மதமானால் தெரிவியுங்கள்' என்றாள். அவள் நினைத்ததற்கு மாறாக பதில் வந்ததும் சந்தோஷத்துடன்

"என்ன மாமி! மீனுவா....எங்கள் மணியை செய்துக் கொள்கிறாள். சினேகிதி என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும். இந்த விதத்தில் நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி. என்னதான் ஏழையாயிருந்தாலும் நான் கஷ்டப்படுவதை சகியாது ஒரு ஊனமானவனை செய்துக்கொண்டு, எங்கள் குலத்தில் தீபத்தை அணையாது ஏற்றிய குல விளக்கு மாமி!" என்று பலவாறு உணர்ச்சியால் உந்தப்பட்ட வார்த்தைகள் அவள் வாயிலிருந்து பொழிந்தன.

"கமலா! தாயில்லாத பெண். நீ சந்தோஷமாயிருந்தால் போதும். இந்த விஷயத்தைப் பற்றி நீ அப்பா, மணியிடம் கேட்டுச்சொல்" என்று சொல்லிவிட்டு வீட்டை அடைந்தாள்.

தங்கக் கொடிபோல் உள்ள மீனுவை மணக்க இவர்களுக்கு என்ன கசக்கிறதா? எங்கு அப்பாவின் மறுகல்யாணத்தைக் காணநேருமோ? என்று நடுங்கிக் கொண்டிருந்தவளுக்கு, தன் அண்ணனின் கல்யாணத்தைக் காணுவதென்றால் எப்படி இருக்கும். அதுவும் தன் உயிர் தோழி தன் வீட்டிற்கே வந்துவிட்ட பிறகு கமலாவிற்கு என்ன குறை?



**பத்ராதிபர்:**—எங்கேடா வந்திருக்கிறாய்?

**ஆள்:**—ஊட்டே கரி இல்லீங்களாம் நம் ஆபீஸுக்கு வர சிறு கதைகளே அடுப்ப எறிக்க கொடுப்பீங்களாமே. அதை வாங்கியார அம்மா ஆள் அனுப்பி இருக்காங்க.

# நக்ஷத்ர மண்டலம்

குமாரி. ராகினி.

"தம்பி! அம்மாதிரி விளையாடாதே! அது ரொம்ப டேஞ்சர்!"—இக்குரலைக் கேட்ட நான் சட்டென்று திரும்பினேன். தன் சைகிளைக்கொண்டு சர்க்கஸ் வேலைகளை புரிந்துக்கொண்டிருந்த ஒருபையனை யாரோ ஒரு பெரியவர் மேற்கண்டவாறு எச்சரித்தார். இதைக்கேட்டதும் என் வாய் என்னை அறியாமலேயே பாட ஆரம்பித்துவிட்டது. "டேஞ்சரு! வெரி வெரி டேஞ்சரு!" என் கால்களோ?—எங்கே நடந்து போயின? என்று கேட்கிறீர்களா? ஆமாம்! சமீபத்தில் வெளிவந்துள்ள படம் ஒன்றில், அந்த பாட்டுக்கு அருமையாக பாவம் பிடித்து, பல அப்ளாசுகளை ஒருங்கே பெற்ற குமாரி **ராகினி** அவர்களின் வீட்டின் வாயிலில் போய்தான் நின்றன. நான் போகும்பொழுது அச்சகோதரிகளுடைய மானேஜர் யாரோ ஒருவருடன் மிக காரசாரமாக வாதம் புரிந்து கொண்டிருந்தார். அந்தகோபம் என்னையும் தாக்கப் போகிறதே என்ற பயத்துடன்தான் நான் உள் நுழைந்தேன். ஆனால் அந்த மானேஜர் வருபவர்களை வரவேற்பதில் வல்லப(வ)ர். சட்டென்று குரலை தாழ்த்திக் கொண்டு, நயம் என்னும் மெருகு பூசி, என்னை வரவேற்று உள்ளே உட்காரவைத்துவிட்டு, மீண்டும் அந்த மனிதரிடம் தமது விவாதத்தை தொடர்ந்தார். அதையே கவனித்துக் கொண்டிருந்த நான், அந்த மானேஜர் எதற்காகவோ தனது இரு செவிகளையும் பந்தயமாக வைப்பதைக்கண்டு திடுக்கிட்டு எழுந்தேன். பிரபல நடிகைகளுக்கு—சகோதரிகளுக்கு மானேஜராக இருக்கும் அவர், தமது காதுகளை இழந்து விட்டால் அது எத்தகைய நஷ்டம்?

"—ககபாப கபதப கரிஸரி காக ரிகரி ஸரிகாக ஸரிக கதபகரி"—இனிய குரலில் மிதந்து வந்த இந்த ஸ்வர மழையைக் கண்டு திகைத்து விட்டேன். சலங்கை ஒலி கேட்க வேண்டிய இடத்தில் சங்கீதம்? ஒரு சமயம் வீடு தவறி வந்து விட்டேனோ என்று ஐயம் கொண்டேன். ஆனால் அக்குரலுக்கு உடையவராக, கூப்பிய கரங்களுடன் ராகினி அவர்கள் என் எதிரில் சந்தேகத்தை விரட்டிவிட்டார். நான் கேட்டேன்.

"அட! உங்களுக்குப் பாடக்கூடத் தெரியுமா?

"சங்கீதத்தை என் ஜீவனாக நான் மதிக்கிறேன் என்றால் அதை எவ்வளவு விரும்புகிறேன் என்பதை நீங்களே தெரிந்துக் கொள்ளுங்கள்!

"நர்கீஸ் அவர்களை விடவா சங்கீதம் உங்களுக்கு பிடிக்கிறது?"

"பார்த்தீர்களா? உங்கள் பத்திரிகைக்காரர்களின் சுபாவத்தைக் காட்டி விட்டீர்களே! நான் கூறியதன் பொருள் அதுவா?"

நானும் விடவில்லை. "அப்படியானால் பத்திரிகைக்காரர்களை உங்களுக்குப் பிடிக்காதா?"—இதற்கு பதிலாக ஒரு சொற்பொழிவே, புரிந்து விட்டார். இவர் பேசும்பொழுது அடிக்கடி ஆங்கில பாஷையையே உபயோகிக்கின்றார். தீபாவளி அன்று, ஒணம்தான் நாம் கொண்டாடவேண்டும் என்றும், அவர்களது அன்னையால் ஆசை காட்டப்பட்டு, கடைசியில் ஒரு பண்டிகையையும், தங்களால் கொண்டாட முடியவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார். பட்டாசுக்காக செலவழிக்க ஐந்துரூபாய் தான் கொடுத்தார்கள் என்று அவர் மானேஜரிடம் சண்டைபுரியும்பொழுது, அவரை குமாரி ராகினி என்று அழைப்பதைவிட குழந்தை ராகினி என்றே அழைக்கத் தோன்றுகிறது.

இவர் கடவுள் பக்தி மிகுந்தவராக காணப்படுகின்றார். இவரது இஷ்ட



தெய்வம் குருவாயுரப்பனை இவர் தியானித்துக்கொண்டிருக்கும்பொழுது அருகில் **நர்ஜேஸ்** வந்து நின்றால்கூட நிமிர்ந்து பார்ப்பாரா என்பது சந்தேகம்தான். சகோதர நடிகைகளுக்கு நடிப்பதற்கு நிறைய சந்தர்ப்பம் தரவேண்டும் என்ற பெருந்தன்மையை இவர் கொண்டிருப்பதால், இவரது சினிமா வாழ்க்கையில் ஒரு ஐந்தாண்டு திட்டம்தான் இடம் பெற்றிருக்கிறது. உங்களுக்கு ஒரே ஒரு இரகசியம் இவரைப் பற்றி கூறிவிட்டு நிறுத்திவிடுகிறேன். இவருக்கு யாரிடம் ரொம்ப பயம் தெரியுமா? தனது **அன்னையிடம்**தான்! இதை என்னிடம் கூறிவிட்டு, அதையும் எங்கே அம்மா கேட்கிறாரோ என்னும் பயத்துடன் உள்பக்கம் அவர் நோக்கியது மிக வேடிக்கையாக இருந்தது.

— **சாரக்ராகி.**

எனது மதிப்பிற்குகந்த எண்ணற்ற ரசிகர்களுக்கு எனது வணக்கங்களை ஜகன்மோகினி என்னும் இப்பத்திரிகையின் வாயிலாகத் தெரிவிக்க நேர்ந்ததைப் பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். படவுலக சம்பந்தப் பட்டவர்களையும், அவர்களை ஆதரிக்கும் அளவற்ற ரசிகர்களையும், இணைக்கும் பாலமாக தற்கால பத்திரிகைகள் திகழ்கின்றன. பெரும்பாலான பத்திரிகைகள் இந்நியதியை கடைப்பிடித்து வருகின்றன. இப்பத்திரிகைகளிலேயே ஒன்று இரண்டு சிறிது பாதை தவறதான் செய்கின்றன. பேனாவின் பெருமை தெரிந்து அதை கையில் பிடிக்காமல், வெள்ளைக்

காகிதத்தை நிரப்பிவைக்கும் ஒரு கருவியாகத்தான் பேனாவை பாவித்து பாதை தவறிய அந்த மிகச்சில பத்திரிகைகள், பாரபட்சம் பாராட்டி எழுதுகின்றன. எங்களுக்கு நல் ஆதரவை எப்பொழுதும் அளிக்கும் ரசிகர்களின் பிரதிநிதி என்று நடிக நடிகையர்களான நாங்கள் பத்திரிகைகளை கௌரவிக்கின்றோம். அதைபோல் சகோதர தொழிலாளர்களான பத்திரிகைக்காரர்களும், வீண் புரளிகளை எழுப்பி ரசிகர்களை குழப்பிவிடாமல், தங்களது சேவையை செவ்வனே செய்து வரவேண்டும்.

சினிமா விஷயத்தில் குறை ஏதும் எனக்கு இல்லை. படவுலகில் பொறுப்பு மிகுந்தவர் டைரக்டர்தான். நடிகையர்களின் நடிப்பு மிகையாகவோ, அன்றி மோசமாகவோ தோன்றினால் அவரையும் ஒரு காரணமாகக் கூறலாம். அன்றி நடிப்பு சிறந்ததாக தோன்றினால், திறமைசாலியான டைரக்டர் ஒருவரின் கீழ் நடிக்கும்படியான பாக்கியம் பெற்றதே காரணமாகும். தென்னாட்டு நடிகைகளில் எனக்குப் பிடித்தமானவர் பானுமதி. பத்மினியின் நடிப்பையும் ரசிப்பேன். மங்கையர் திலகத்தில் நான் ஏற்றுக்கொண்டதைப் போன்ற பாத்திரங்களைதான் நான் மிகவும் விரும்புகிறேன். என் ஓய்வு நேரங்களில் நான் காமிராவுடன்தான் காட்சி அளிப்பேன். வீட்டிலேயே அதற்கான வசதிகள் அனைத்தும் செய்து கொண்டுள்ளேன். அதற்கென கண்டவைகளை புகைப்படம் எடுத்து, காலத்தையும் காசையும் வீணடிக்கமாட்டேன். இது மிகவும் உயர்ந்த பொழுதுபோக்கு.


இன்னும் ஐந்து வருடங்களுக்குப் பிறகு சினிமாவில் நடிப்பதையே நிறுத்திவிடுவதென தீர்மானித்திருக்கிறேன். திறமைமிகுந்த சகோதர நடிகைகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டியே விலகுகிறேனே அன்றி வேறு எவ்விதக் காரணமுமில்லை. பிரபல வித்வான் ஜி. என். பாலசுப்ரமண்யம் அவர்களிடம் எனது சிட்சையை மீண்டும் தொடங்குவேன். எனக்கு பிடித்தமான வித்வான்கள், ஜி. என். பி; மதுரை மணி; எம். எஸ்; எம்.,எல். வி, முதலானவர்கள். மேடையில் நடனம் ஆடுவதைவிட அதிகமாக இவர்களது கானத்தைதான் விரும்புகிறேன். ரேடியோவில் கூட நான் கர்னாடக சங்கீதத்தைதான் ரசித்துகேட்பேன்.

கடவுள் உண்டென நம்புகிறவள் நான். நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் அவர் நியமித்துள்ளபடிதான் நடக்கிறது. கடவுள் இல்லை என கூறுபவரை கண்டால் அவர்கள் இருக்கும் திசைக்கே ஒரு கும்பிடு செலுத்திவிட்டு, காததூரம் ஓடிவிடுவேன்.

ரசிகர்களுடைய ஆதரவைப் பற்றி நான் கூறத்தேவையில்லை. தான் பிடித்திருக்கும் புத்தகம் தலைகீழாக இருக்கிறது என்பதைகூட உணரத் தெரியாத சிறுவர்கள், சினிமா ரசிகர்களின் முன்னணியில் நிற்கிறார்கள். அது தவறு, கோடி பொன்னைவிட அதிக மதிப்புள்ள கல்விச் செல்வத்தை அடைய முயற்சிக்காமல் இம்மாதிரி வீணாகக் காலம் கழிக்கும் அவர்களது செயல் கண்டிக்கத்தக்கதாகும். இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும், பொறுப்பு என்னும் பளு ஒன்றை, பகவான் அமர்த்தியிருக்கிறார். மனித பிறவிக்கோ கேட்கவே வேண்டாம். கடைசி

யில் காலனது கயிற்றில் கட்டுப்படும்வரை, கடமையிலேயே கிடந்து உழலும்படியாக மனிதன் கட்டளையிடப்பட்டிருக்கின்றான். வெறும் பொழுதுபோக்கிற்காக, உள்ளமும் உடலும்சோர்ந்திருக்கும் சமயத்தில், கண்டு களிக்க கலை ஏற்பட்டுள்ள போதிலும், கடமையை மறந்து, அதிலேயே மூழ்கவேண்டு மென்பதில்லை. கலையை ஆதரிக்கவேண்டும். கலைஞர்களையும் ஆதரிக்கவேண்டும் ஆனால் அந்த கலைஞர்களுக்கு ஆபத்து அளிக்கும் வகையில் தங்களது ஆதரவை காட்டக்கூடாது. அன்பான—கௌரவமான முறையில் அவர்களை ஆதரிப்பதே ரசிகர்களுடைய உயர்ந்த பண்பாகும். அவர்களே உண்மையான ரசிகர்கள். "சும்மா இருந்தால் சோத்துக்கு நஷ்டம்" என்பது எனது அபிப்பிராயம். ஒவ்வொருவரும் தமது சக்திக்கேற்றபடி உழைத்து, பிறர் தயவை எதிர் பார்க்காமல், தமது சுயதேவையை தாமே பூர்த்திசெய்துக் கொள்ள வேண்டும். வணக்கம்!

---





# என்னருமைத் தந்தை

குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி.

என்பிதா போட்டோ கலையில் எவ்வளவு தேர்ந்தவரோ, அதேபோல் சங்கீதக் கலையிலும் திறமைவாய்ந்தவர் என்று முன்பே கூறியுள்ளேன். பாட்டு பாடுவது மட்டுமின்றி பாட்டைரசித்து 'அதைப்பற்றி விமர்சனம் எழுதுவதிலும் வல்லவர். 'நித்யாநந்தா' என்ற பெயரில் அவர் பல எழுதியிருந்ததை யாவரும் படித்திருப்பீர்கள்.

ரேடியோவிலும் என்பாட்டியோடு அடிக்கடி பாடியிருக்கிறார். பாட்டு ஞானம், படிப்பு, திறமை பலவும் ஒன்றுகூடி என்பிதாவிடம் அமைந்திருந்ததால் அவரை ரேடியோவிலேயே வேலைக்கு பலதடவைகள் வருந்தி அழைத்தனராம். ஆனால் என்பாட்டியும் தாத்தாவும் அதை மறுத்துவிட்டனராம். காரணம்?.... ஊர் ஊராக மகனை மாற்றிவிடுவார்கள். அப்போது பிரிந்து இருக்க வேண்டுமே என்பதுதான். அப்படி அப்போது கூறியவர்கள் இப்போது நிரந்தரமாகப் பிரிந்து தவிப்பதைப் பார்த்தால் சங்கடமாயிருக்கிறது.

ஒரு சமயம்—என்பிதா கலேஜில் படித்துக் கொண்டிருக்கும்போது காலேஜ் ப்ரின்ஸிபால் அவரைக் கூப்பிட்டு அனுப்பினாராம். என்ன கெட்டிக்காரராக இருந்தாலும், தன்னைமட்டும் ப்ரின்ஸிபால் கூப்பிடுகிறார் என்பதைக் கேட்டு ஒரே நடுக்கம் எடுத்துக்கொண்டதாம். வெளிறிய முகத்துடன் குடல் நடுங்க போய் நின்றாராம். இவர் முகத்தைப் பார்த்ததும் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதுபோல் ப்ரின்ஸிபால் அறிந்து கொண்டு விட்டாராம்.

அப்போது என் தந்தை குடுமி வைத்திருந்ததால் அதைப்பிடித்து ஆட்டிக்கொண்டே, "என்ன ஸ்ரீநிவாஸன்! இப்படி நடுங்குகிறாய். ஒரு குற்றமும் உன்மேல் இல்லை. பயப்படாதே. ஒரு 'குட் நியூஸ்' சொல்லதான் கூப்பிட்டேன். இது காலேஜ் விஷயமே இல்லை.... நான் சொல்லப்போவதைக் கேட்டதும் நீ மிகவும் வியப்படையப் போகிறாய்" என்றாராம் உற்சாகத்துடன்.

அவர் இவ்வளவு அமைதியாக பேசுவதைக்கேட்ட பிறகுதான் தந்தையின் நடுக்கம் அடங்கி சாதாரணமாக சிரித்தவாறு நின்றாராம். உடனே பிரின்ஸிபால் லண்டன்

தேசத்து ஆங்கில பத்திரிகை ஒன்றை எடுத்து கொடுத்தாராம். அதைப் பார்த்ததும் அவர் கூறியதுபோலவே ஆச்சரியத்தால் ப்ரமித்துவிட்டாராம். அதில் என்பாட்டி எங்கோ ஒரு இடத்தில் கொடியேற்றும் போது எடுத்த புகைப்படத்தை ப்ரசுரித்திருந்ததாம். அங்கு எழுதியிருப்பதைபடிப்பதற்குள் ப்ரின்ஸிபாலே "ஸ்ரீநிவாஸன்! என்ன நான் சொன்னபடி ப்ரமித்துதானே விட்டாய். உன் தாயார் எங்கோ கொடியேற்றினதை ப்ரசுரித்து, அவரைப் பற்றி எப்படி எழுதியிருக்கிறது பார்த்தாயா? உன் தாயாரின் புகழும், பெருமையும் நம் இந்தியாவோடு மட்டும் இல்லாமல் லண்டன் மாநகரத்தின் முக்யமான பத்திரிகையிலேயே எழுதியிருக்கிறார்கள். இது என்ன நடக்கக் கூடியதா அப்படிபட்டவரின் மகன் என் மாணவனாக இருப்பதில் எனக்கு எவ்வளவு பாக்கியம். நீ வெகு நன்றாகப் படித்து எல்லாவிதத்திலும் சிறந்து முதல்வனாக விளங்குகிறாயே என்று நான் ஆச்சரிய பட்டதுண்டு. இப்போதுதான் நீ அப்படி விளங்குவதன் காரணம் தெரிகிறது. வெளிநாடுகளெல்லாம் புகழும் ஒரு பெண்மணியின் மகனாயிற்றே'' என்று சந்தோஷப் பெருக்கால் கூறினாராம்.

பிறகு என் தந்தை அவரிடம் 'ஸார்! நான் இதை என் அம்மா, அப்பாவிற்கு காட்டிவிட்டு கொடுக்கிறேன்" என்று பெருமையும் ஆனந்தமும் கலந்த உணர்ச்சியுடன் கூறிவிட்டு விடைபெற்றாராம்.

பாட்டி, தாத்தா தவிர பல சிநேகிதர்கள், உறவினர்களிடமும் அப்படத்தைக் காட்டி குதித்தாராம். இப்படியே என்பிதா கடைசிகாலம் வரையில் பாட்டிதாத்தாவின் வார்த்தைக்கு தடங்கல் கூறாது தன் அம்மாவின் புகழ் மேல்மேலும் ஓங்க எத்தனையோ காரியங்கள் செய்திருக்கிறார். அவரது செய்கைகளையும், குணத்தையும் வீட்டிற்கு வருபவர்கள் பலர் கூறக்கேட்கும்போது வியப்பாக இருக்கிறது. நாங்கள் இத்தனை நாளாக என்பிதாவை 'நமக்கும் அப்பா' என்ற முறையில் செல்லமாக இருந்துவிட்டோம். ஆனால் இப்போதுதான் அவர் சாதாரணபட்டவர் அல்லர். ஒரு உத்தமபுத்திரன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தபெருமை தெரிகிறது.

அப்படிப்பட்ட தந்தையை நாங்கள் இழந்து இந்த பிப்ரவரி 5-ம் தேதிக்கு ஒருவருடம் பூர்த்தியாகிவிடுகிறது. அவர்தான் தெய்வமாயிருந்து எங்களெல்லோரையும் ஆசீர்வதித்து குறையின்றி காப்பாற்றவேண்டும் என்று இறைவனை வேண்டி அஞ்சலி செய்கிறேன்.

# உண்மை ஊழியனின் கதறல்

உங்கள் உப்புரொணம் தின்று உடலை வளர்த்த உங்கள் அடிமை ஆறுமுகம் வருத்தத்துடனும், அழுத கண்ணீருமாய் எழுதியது:—

நான் பாவி. அங்கே இந்த அநியாயத்தைக் கேட்டு இங்கே வந்து ஜுரமாய் இத்தனை நாள் படுத்துக் கொண்டேன். இந்த அதிர்ச்சி என்னையே இப்படியாக்கிவிட்டது என்றால், தங்களுக்கும், அம்மாளுக்கும் எப்படி இருக்கும் என்பதை விவரிக்க யாராலும் இயலாது. எப்படியோ நம்மையெல்லாம் விட்டுபிரிந்திருக்கிறார். அந்த பார்த்தசாரதி கடவுளுக்குகூட கண் இல்லை. நான் வெளியூருக்கு போயிருந்தேன். நான் அப்பொழுது இருந்தால் என் உயிரையே என் அப்பனிடம் சேர்த்து விடுவேன் என்பதை இப்பொழுது சொன்னால் நம்பமாட்டார்கள். நான் இருந்து யாரைகாப்பாற்றுகிறேன். அவர் இருந்தால் என்னைப்போல் எத்தனையோ ஜீவன்களை காப்பாற்றுவார். நான்போய் அவர் இருக்கக்கூடாதா? இதுதான் கடவுளுக்கு நியாயமா?. சொன்ன உடனேயே என் கண்மணியும், தெவிட்டாத அமுதமணியும், சக்கரவர்த்தியும், ஸ்ரீநிவாஸ பெருமாளைப்போல் காட்க்ஷி அளித்தவரும், என் சகோதரர்மாதிரி அம்மா எங்களுக்கு அன்னமிட்டு எங்கள் இருவரையும் 1930-ல் ஒரேபடுக்கையில் எங்களுக்கு புத்தி புகட்டியும், உடைகள் தந்தும் எங்களை காப்பாற்றி கரைதேற்றினார்கள், காங்கிரஸ் மீட்டிங்குக்கு வெளியூர் போனால் எங்கள் இருவரையும் சகோதரர்போல் எண்ணி என்னைபணியாள் என்பதையும் மறந்து எங்களை ஆதரித்தீர்களே. இதையெல்லாம் வழியில் நினைத்து ஆராத்துயரத்தை அடைந்தேன். துக்கமேலிட்டு கதறிக்கொண்டு வந்தேன். உடம்பு சரியில்லாத அம்மாவைப்பார்க்க இந்த நிலையில் முடியாது திரும்பிவிட்டேன்.

'பொடி மாஸ்டர்' என்று என்னை ஆசையோடு அழைப்பாரே. என்னை அவர் வழியில் கண்டாலும் நின்று பேசிவிட்டு போவாரே இனி அவரைபோல் யார் பேசிவிட்டு போகப்போகிறார்கள். என் ஆண்டவன் எப்படி என்ன நினைத்துக்கொண்டு விஜயலட்க்ஷிமியையும், குழந்தைகளையும், தங்களையும் விட்டு மறைந்தாரோ. எனக்கு இரவில் தூக்கம் வராமல் கண்ணீர் கலங்கியபடியே இருக்கிறேன். அவர் பிரசிடெண்சி காலேஜில் இருந்து வருகிறதும், வந்ததே பொடி மாஸ்டர் என்று என்னை அழைப்பதும் நான் பிட் நோட்டீஸ்கொடுக்க கோகலே ஹாலுக்கு போனால், கும்பலில்போகாதே, நசுங்கி விடப்போகிறாய் என்று

(தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்)




“என்னாங்க அநியாயமா இருக்கே” என்று மேலே பேச ஆரம்பிக்கும் முன், “முத்து! நீ பேசமால் இரு. அநியாயமில்லை. நியாயம் என்று நினைத்துக் கொண்டு தானே எழுதி யிருக்கிறார்கள். இரு மேலே படிப்போம்” என்று கடிதத்தைத் தொடர்ந்தார்.

அதையே ஊர்ஜிதபடுத்துவதுபோல் இருந்தது உங்கள் பேச்சும். நேர்மையான குணமும், மனதில் ஒரு கபடமும், சூதும் இல்லாதவரா யிருந்தால் ரகு பணம் கேட்டபோது ஏன் கொடுக்க மறுக்கவேண்டும்? அதோடு நில்லாது ப்ரின்ஸ்பால் வீட்டிற்குப்போய் ஒன்றை ஒன்பதாகக்கூறி, அவர் சொல்லாததைச் சொல்லி ஏன் எங்கள் குடும்பத்தை அவமானபடுத்த வேண்டும்.

ஏதோ அதுமட்டும் ரஞ்சனைப் பற்றியாவது புகழ்கிறீர்களே! அவன் சொத்தையாவது கொடுப்பீர்களோ. அது எங்கே....அவன் ஒரு பத்தாம் பசலி, அன்பு காட்டுபவர்போல் அபகரிக்கவே இந்த நாடகம். அவரவர்கள் தலையெழுத்துப்படி, விதிபடி எல்லாம் நடக்கட்டும். நீங்கள் எங்கள் விஷயங்களில் தலையிட்டு இந்த தள்ளாத வயதில் ச்ரமபடவேண்டாம்.

நேற்று தம்பி பாஸ்கரன் வந்திருந்தான். அவனும் ஏதேதோ, ரகுவின் மீதும் ரேவதியின் மீதும் ப்ரசங்கம்செய்வதுபோல் பழிகள் கூறினான். அப்போது உண்மையாக இருக்குமோ என்று குழம்பினேன். உங்கள் கடிதம் கண்டதும், நீங்கள் எழுதியுள்ள அதே விஷயங்களை அவனும் பேசிய திலிருந்து நெஞ்சில் ஒரு மூலையில் சந்தேக விதை விழுந்தது. ‘ரகுவின் மூலம் அவனும் உங்கள் சூழ்ச்சி நாடகத்தின் பாத்திரங்களில் ஒருவன்’ என்பதை அறிந்ததும் விதை விருக்ஷமாக மாறி விட்டது.

என் கணவரும், இந்த ரஞ்சனும்தான் உங்களுடைய நச்சு போன்ற சிநேகிதத்தை வைத்துக் கொண்டு, ஏமார்ந்து பலவிதத்திலும் அல்லல் பட்டது—படுவதுபோல நாங்களும் இருக்க ஏமாளங்கள் அல்ல. ரஞ்சன் என்னிடம் "வீட்டின் பொறுப்பு உங்களுடையது. நீங்கள் தான் கவனித்துக்கொள்ள வேண்டும்" என்று கூறியதாக பல சமயம் நேரில் வந்தபோது கூறினீர்கள். கடிதத்திலும் குறிப்பிட்டிருக்கிறீர்கள் அது எவ்வளவு உண்மையோ. ஒரு சமயம் அந்த பித்துகுளி கூறியும் இருப்பான்.

அவன் என்ன விவரம் அறியாதவனா—அல்லது வீட்டிலிருப்பவர்கள்தான் பச்சைக் குழந்தைகளா?—உங்களிடம் அவ்வளவு நயமாகக் கூறி விட்டு போனவனுக்கு—வீட்டிலேயே குத்துக்கல் போல் இருக்கும் நான் கண்ணில் படவில்லையோ? அதுதான் போகட்டும், பம்பாய் போய் சேர்ந்தவன் உங்களுக்குக் கடிதம் எழுதினானே - இந்தவீட்டிற்கு இரண்டுவரி எழுதுவதற்குள் கை வலித்து விட்டதோ பாவம். எல்லாம் தெரியும். இதிலிருந்தே தெரியவில்லை எனக்கு எவ்வளவு மதிப்பு என்று. இவன் மதிப்புக்கு காத்துக் கொண்டிருக்க நான் அவ்வளவு மோசமான நிலையில் இல்லை. இதற்கு சரியான பதில் உடனே வரும் என்று எதிர்ப்பார்க்கிறேன்.

இப்படிக்கு, லக்ஷ்மி அம்மாள்.

பெருமூச்சுடன் கடிதத்தை மடித்தார். "முத்து! எவ்வளவு விறுவிறுப்பாக அழகாக இருக்கிறது இல்லையா?" என்றார் சிரித்துக்கொண்டே.

"ஐயா! எனக்கு உடம்பெல்லாம் குப்புனு வெயர்த்து கொட்டுதுங்க. கால் நடுங்குதுங்க. சின்ன எசமான்........ மேலே பேசமுடியாமல் துக்கம்தொண்டையை அடைத்தது.

"முத்து! உனக்கு ஏன் இவ்வளவு துக்கம் வருகிறது. தங்களுக்கு பின்னால் எப்படிபட்ட ஆபத்துவரப்போகிறது என்பதை யோசிக்காது இப்படி கடிதம் எழுதியும், செய்கையிலும், தங்களைப் பாழக்கிக்கொள்கிறவர்களுக்கே கவலை இல்லையே. உன்னைப் பார்த்தால் எனக்கு ரொம்ப பரிதாபமாக இருக்கிறது".

"ரஞ்சன்மேலே வெச்சிட்ட பாசந்தாங்க என்னை இப்படி குரங்குபோல ஆட்டுது. அதுக்காக நான் எவ்வளவு கஷ்டத்தையும் பொறுத்துக்கறேங்க"

"உன்னைபோல ஒரு வேலைகாரன் கிடைக்க அவர்கள் போன ஜன்மத்தில் என்ன தவம் செய்தார்களோ. அப்படிபட்டவனை இப்படி பரிபவ படுத்துகிறார்களே"

"ஹூம். எனக்கு ரஞ்சன் நன்றாக இருக்க வேண்டியது ஒன்றுதாங்க..."

"சரி.... நாம் எங்கோ ஆரம்பித்து எங்கோ போகிறோம். இந்தக்கடிதத்தை அம்மாளே எழுதியிருப்பாங்கன்னு உனக்குத் தோன்றுகிறதா?"

"எனக்கும் சந்தேகமாத்தான் இருக்குங்க. ரகு அதைக் கொடுக்கும்போதே அந்தசந்தேகம்ஏற்பட்டுதுங்க"

"அடியிலிருக்கும் கையெழுத்து என்னவோ அம்மாவினுடையதுதான். ஆனல் அதற்கும் கடிதத்திலிருக்கும் கையெழுத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. எனக்கு ரகுவின்மேல்தான் சந்தேகமாக இருக்கிறது"

"ஆமாங்க. அம்மா இவ்வளவு துணிச்சலா எழுதுவாங்கன்னு எனக்குத்தோணலே. பத்துமாசம் கர்பிணியை தீண்டி அடிச்சு குழந்தையைகொலைசெய்தவர் இந்த கடுதாசி எழுததான் பயப்படுவாரா?

"ரகு ரொம்ப மிஞ்சிவிட்டான். இதற்கு என்ன வழி செய்வது என்றே என்மூளையை செல்லரிப்பதுபோல் அரித்துக்கொண்டிருக்கிறது. எங்கள் குடும்பத்தைப் பற்றிக்கூட எனக்குக் கவலையேகிடையாது. ஆனல் இந்த கவலை என்னை விடாதுபோலிருக்கிறது".

"ரஞ்சன் ஐயா ஊருக்குப்போய் நாலு நாள் ஆவல்லே, இதுக்குள்ளே இப்படி திமிலோகப்படுதே. இன்னும் நாலு வருஷத்துலே என்னென்ன நடக்குமோ. எப்படி கடத்தப் போறேனே. கொட்டைப்பாக்காய் நாள் உருண்டு எப்பதான் சின்ன எசமான் வருவாரோன்னு இருக்குங்க" என்றான் முத்து. அப்போது அவன் கண்களில் கண்ணீர்கூட வந்துவிட்டது.

இந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே வந்த பார்வதி "உங்களுக்கு எத்தனைசொன்னலும் தெரியவில்லை. அவர்கள் சொத்தை நாம் என்ன தின்றுவிடவாப் போகிறோம். அவர்களிடம் இத்தனைப்பேச்சும் வாங்கிக்கொண்டு சொத்தைக் காப்பாற்றி தரவேண்டுமோ. பேசாமல் அவர்கள் முகத்தில் வீசி எறியுங்கள்" என்றாள் படபடப்போடு.

"பார்வதி! கோபப்படாதே. பாவம்! குழந்தை ரஞ்சன் நம்மை நம்பிதானே அவ்வளவு தூரம் போயிருக்கிறான். நாம் அவனுக்குக் கொடுத்தவாக்கை மறந்து விட்டாயா? உன் சொல்படிசொத்தை அவர்களிடம் வீசி எறிந்து விட்டால் ரஞ்சன் ஊர்திரும்புவதற்குள் திவாலாகி கப்பரையை

எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். இந்த விஷயங்களை யெல்லாம் ரஞ்சன் கேட்டால் என்ன துடிப்பான். ரகு அந்த குடும்பத்திற்கு கோடாரிக் காம்பாக அமைந்திருக் கிறானே. என்னசெய்வது" என்றார்.

சதாசிவத்தின் பெருந்தன்மையும், நியாயமான பேச்சும் கேட்ட பார்வதியும் சரி என்றாள். முத்துவும் "ஆமாங்க. நீங்க ரெண்டுபேரும்தான் அத்தக்குடும்பத்தைக் காப்பாற்ற வேணும்" என்றான். வேறொன்றும் அந்த நிலையில் அவ னுக்குப் பேசத்தெரியவில்லை—வரவில்லை.

"முத்து! நீ வீணாகக்கவலைப்படாது போ. நான் எல்லா வற்றிற்கும் வழி செய்கிறேன். வள்ளியை எப் போது அழைத்துப்போகச் சொன்னார்கள்? வேலனைப் போய் அடிக்கடி பார்த்துக்கொள்ளச்சொல். நீ ஒன்றிலும் படாது விடேதியாகவே இருந்துவிடு" என்று புத்தி புகட்டினர்

"வள்ளியை நாலைந்து நாளில் அழைத்துப்போகலாம் னுங்க. இந்த வீட்டு அமர்களத்திலே. இன்னும் தள்ளியே அழைச்சிகிணு வரலாம்னு பாக்கறேங்க" என் றான். பிறகு வீடு சென்றான். கடிதத்தைப்பார்த்து தலையில் வைத்த கையை மட்டும் சதாசிவம் எடுக்கவேயில்லை.



பார்வதியும், சதாசிவமும் இதைப் பற்றியே மணி கணக்காகப் பேசினர். மூத்துவிற்கு புத்திசொல்லி அனுப்பிவிட்டாரே தவிர, என்ன பேசியும், ஆறுதலடைந்தும், அவருடைய இதய பாதாளத்தில் இதைப்பற்றிய ஒரு விதை விழுந்து அவரை அழுத்திக் கொண்டே இருந்தது. அவருடைய மனத்திலிருந்து இது கடிதமா?....பாணமா? என்ற கேள்விகள் அலை அலையாகச் சுருண்டு எழுந்து உடைந்து கொண்டே இருந்தது.

---

## அத்தியாயம் 10.

### அமெரிக்க பிரயாணத்தின் ஆனந்தம்

வீடே கல்யாணம் படுகிற பாடாக இருந்தது. ஏன்? அன்று ரஞ்சன் புறப்படும் நாள் அல்லவா! அமெரிக்கப்பிரயாணத்திற்கு ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன.

"ஹும் நாழியாகிவிட்டது. கிளம்புங்கள் விமான நிலையத்திற்கு" என்று எல்லோரையும் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார் பரமசிவம்,

மோகனும், ரஞ்சனும் மாடியறையில் வேலைசெய்தவாறு பேசிக்கொண்டிருந்தனர்.

"ரஞ்சன்! அந்தப் போட்டோவை மட்டும் வெளியிலேயே வைத்துக்கொள். உன் போட்டோவையும் அவனுக்கு அனுப்பியிருக்கிறேன். வெளியிலேயே இருந்தால் தான் ப்ளேனிலிருந்து இறங்கியவுடனே அவனை சீக்கிரமாக அடையாளம் கண்டு பிடிக்கலாம்"

"ஓ! மேலாகதான் இருக்கிறது. அவன் பெயர் என்ன சொன்னாய். அதை மறந்துவிட்டு முழிக்கப்போகிறேன்"

"அவன்பெயர் சுதர்ஸன், அழகானபெயர். சதாசிவம் தாத்தாவும் அவனுக்குக் கடிதம் எழுதியிருப்பார். தைரியமாய் போய் நன்ருகப் படித்து ஊர் திரும்பும் போதும் நீ இங்கு வந்து தங்கி விட்டுதான் போகவேண்டும்"

"சரி சரி. இன்னும் நான்கு வருட சமாசாரத்தை நீ இப்போதே பேச ஆரம்பித்துவிட்டாயே. கிளம்பு." என்று சம்பாஷணைக்கு முற்றுபுள்ளி வைத்துவிட்டு கீழே இறங்கினர்.

"ரஞ்சன்! சாமானெல்லாம் வண்டியில் ஏற்றியாகிவிட்டது நீயும் மோகனும் ஒரு காரில் ஏறுங்கள், நாங்க

ளெல்லோரும் மற்றென்றில் வருகிறோம்'' என்றார் பரமசிவம்.

"பாபு! ரஜனீ! போய்விட்டு வருகிறேன். என்ன?'' என்று இவர்களோடும், வீட்டிலிருக்கும் வேலைகாரன் முதற்கொண்டு எல்லோரிடமும் சொல்லிக்கொண்டுதான் ரஞ்சன் சென்றான்.

விமானம் கிளம்பப் போகிறது. ரஞ்சன் நூறுவது தடவையாக ''போய்விட்டு வருகிறேன்'' என்று பரமசிவம் குடும்பத்தாரிடம் கூறிக்கொண்டிருந்தான். விமானமும் பறந்தது. கண்ணுக்கெட்டியதூரம் வரையில் இவர்களையே பார்த்தவாறு ரஞ்சன் அமர்ந்திருந்தான்.

இவர்களுடனேயேபேசிக்கொண்டிருந்ததில் விமானத்தில் தன்னுடன் யார் யார் ப்ரயாணம் செய்கிறார்கள் என்பதைகூட கவனிக்கவில்லை. விமான நிலையத்தின் பிம்பம் கண் பார்வையிலிருந்து மறைந்த பிறகுதான் திரும்பி பக்கத்திலிருப்பவர்களைப் பார்த்தான்.

அவர்களில் ஒருமுகத்தை எங்கோபார்த்ததுபோன்று தோன்றியது. பிறகுதான் அவர் தன்னுடன் பம்பாய் வந்த ப்ளேனிலும் வந்தார் என்ற நினைவு ஏற்பட்டது. அதை ஊர்ஜிதப் படுத்துவதுபோல் அவரும் ரஞ்சனைப் பார்த்து சிரித்தார். சிரித்ததுடன் நில்லாது, "நீ எவ்வளவு தூரம் போகிறாயப்பா?'' என்றார்.

"நான் அமெரிக்கா போகிறேன். நீங்களும் அங்கு தான் வருகிறீர்கள் போலிருக்கிறதே''

"ஆமாம் உன்னுடன்தான் வந்தேன். நான் அவ்வளவு தூரம் வரவில்லை. பாரிஸுக்குப் போகிறேன். இரண்டு வருஷமாவது இருப்பேன்''.

'ஒஹோ! ப்ளேனில் முன்பின் தெரியாத யார் யார் இருப்பார்களோ. பேச்சுத்துணைக்குகூட இல்லாது எப்படி ப்ரயாணம் செய்வது என்று எண்ணிக்கொண்டிருந்தேன். நல்லவேளை பாரிஸ் வரையிலாவது நீங்கள் கிடைத்தீர்களே''— இப்படியாக பேசிக்கொண்டே இருந்தனர். விமானமும் தன் காரியத்தை துரிதமாகச் செய்துகொண்டிருந்தது. ரஞ்சன் சென்ற விமானம் பல இடங்களில் நின்று மெள்ளமாகப் போகும் விமானம் அல்ல, நாலே இடங்கள்தான் நடுவில் இளைப்பார. அதன்படி 'கெய்ரோவில் நின்றதுவிமானம். ரஞ்சனும், அவனது விமான நண்பரும் விமானத்திலிருந்து இறங்கி சிற்றுண்டி அருந்திவிட்டு, சிறிது நேரம் இளைப்பாறினர். விமானத்திலிருந்தவர்கள் பலரை, அவ்வூரிலுள்ள அவர்களுக்குத் தெரிந்தவர்

கள் பலர் வந்து பார்த்து பேசினர். விமானம் 45 நிமிடம் தான் நின்றது, பிறகு புறப்பட்டது.

அதேபோல் ரோம் நகரத்திலும் நின்றது. இன்னும் சில மணிநேரம் அதிகமாக நின்றால் ஊரை ஒருமுறை மேலாகவாவது சுற்றிப் பார்க்கலாமே என்று ரஞ்சனுக் குத்தோன்றியது. அடுத்தபடி நிற்கும் இடம் 'பாரிஸ்'தான். அங்கு ரஞ்சனின் புது நண்பரும் இறங்கிவிட்டார்.

பிறகுதான் ரஞ்சன் பேச்சுத்துணையின்றி, விமானத் தில் இருக்கும் 'மற்ற ப்ரயாணிகளையே அவர்கள் பேசு வதையே மாறி மாறி பார்த்துக்கொண்டு நேரத்தைக் கடத்திக்கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்த 'நியூயார்க்'கும் தெரியத் தொடங் கியது. வந்து இறங்கியதும் ஒருகண்ணோட்டம்விட்ட ரஞ்சன் கஷ்டப்படாமல் மோகன் குறிப்பிட்ட சுதர்ஸன் என்ற வரைக் கண்டுபிடித்துவிட்டான். அங்கிருந்து நேராக ஹோட்டலுக்குச் சென்றனர். சாமான்களை வைத்து விட்டு, சாப்பாட்டையும் முடித்துக்கெண்டு ஊரைச்சுற்றிப் பார்க்கக் கிளம்பினர். முதல் காரியமாக சதாசிவத்திற்கு தந்தியும், லக்ஷ்மிக்குக் கடிதமும் அனுப்பினன். சுதர்ஸ னேடு பேசியதில், அவன் ரஞ்சன் படிக்கும்படிப்பே தான் படிக்கிறன், ஆனல் நான்கு வருடத்தில் இரண்டு வருடம்தான் பாக்கி என்றும், அவன் ரஞ்சனைவிட இரண்டு மூன்று வயது பெரியவன் என்றும் அறிந்து கொண்டான்.

"இங்கு ரொம்ப விலை அதிகம் இல்லையா? எல்லாம். ரொட்டி பால், ஒரு ஆப்பிள்தான் சாப்பிட்டோம். 3-ரூபாய் ஆகிவிட்டதே" என்று ரஞ்சன் பேச்சைத் தொடங்கினன்.

"நாம் இந்தியாவில் இருந்துவிட்டு இங்கே வந்தால் அப்படி தோன்றுகிறது. இங்கு இருப்பவர்களின் வருமானத்திற்கு இது ஒன்றும் அப்படி அதிகம் இல்லை. முதலில் 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்'கிற்குப் போகலாம்"

அதைப்பார்த்துக்கொண்டு மேலும் பல இடங்களையும் அலுப்பு தீரச் சுற்றினன். நியூயார்க்கிலேயே நாலைந்து நாட்கள் தங்கி சுற்றிபார்த்தான்.

அமெரிக்கத் தலைநகரமான வாஷிங்டனில் பார்க்க வேண்டிய முக்யமான இடங்களைப்பார்த்துவிட்டு, தான் படிக்கச் சேல்லவேண்டிய இடத்திற்கு சுதர்ஸனுடன் சென்றான்.

சுதர்ஸனின் முன் ஏற்பாட்டினல் அங்கு ரஞ்சனுக்கு அவனுடைய சக மாணவர்கள் தடபுடலாக வரவேற்பளித்

தனர். கள்ளங்கபடமற்ற சுதர்ஸனை ரஞ்சனுக்கு முதலில் பார்த்தபோதே ரொம்பவும் பிடித்துவிட்டது. அவன் ரஞ்சனை, 'தன் அறையிலேயே தங்கி விடும்படியாகவும், வேறு வீடு பார்க்க வேண்டாம்' என்றும் கூறினான்.

ஆனால் அதற்கு ரஞ்சன், 'அந்யோன்னிய சிநேகிதர்களாக இருப்பவர் ஒன்றாக இருந்தால் ஏதாவது ஒரு சில்லரை விஷயத்தில் மனஸ்தாபம் ஏற்பட்டு விடும். அதனால் நம் அன்பு அணை உடைந்து, பலவிதத்திலும் கெட்ட எண்ணங்கள் வெள்ளம்போல் புரள ஆரம்பித்துவிடும் உன் ஆசைக்காக சிலநாள் தங்கிவிட்டு பிறகு நான் தனியாகவேபோய் விடுகிறேன்' என்றுகூறி சுதர்ஸன் வீட்டு அருகிலேயேயுள்ள வேறு வீட்டிற்குப் போய் விட்டான்.

சுதர்ஸன் தன் தம்பிபோல் ரஞ்சனை பாவித்து, அவனுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்துவந்தான். புது இடத்தில் அதுவும் அமெரிக்காவில், புதிய படிப்பை, புதிய சிநேகிதர்களுடன் சேர்ந்து படித்து, அவர்களோடு பழகுவதில் ரஞ்சன் வெகு உற்சாகத்துடன் காணப்பட்டான். இந்த சூழ் நிலையினால் நாட்கள் நகருவதையும் அறியாது, தன் வீட்டுக் குழப்பங்களையெல்லாம் மறந்து நிம்மதியாக இருந்தான்.

ரஞ்சன் பெரிய குடும்பத்தில் பிறந்து செல்வமாக வளர்ந்தவனானாலும், அநாவசிய செலவுகளை எப்போதுமே செய்யமாட்டான். இந்தியாவிலிருந்து கிளம்பும்போது, 'நாம் அங்கு ஹோட்டலிலேயே சாப்பிட்டு காலத்தைத் தள்ளிவிடலாம், அல்லது எல்லாவற்றிற்கும் ஒரு ஆள் வைத்துக்கொண்டு விடலாம்' என்ற எண்ணத்துடன் வந்தான். ஆனால் இங்கு வந்து அமெரிக்கர்களைப் பார்த்ததும் அந்த எண்ணம் முற்றிலும் மாறுதலடைந்துவிட்டது.

இங்குள்ள பெரிய பெரிய தனவந்தர்கள் முதற்கொண்டு தாங்களே வீட்டுவேலைகளை சிறிதும், சிரமும் அலுப்பும் இல்லாமல் செய்வதைப் பார்த்ததும் இங்கு அகப்படும் பொருள்களை வைத்துக்கொண்டு தானே 'சுயம் பாக'த்திற்கு ஆரம்பித்துவிட்டான்.' இங்கு வேலைக்காரர்களை அமர்த்திக்கொள்வது நம் ஊரைப்போல் சுலபமாக இல்லாமல் ஒருபெரிய ப்ராப்ளமாக இருப்பதைப் பார்த்ததும் ரஞ்சனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இதையெல்லாம் பார்த்ததும் முதலில் இவ்விஷயங்களை சதாசிவத்திற்கு எழுதிவிடவேண்டும் என்று அவன் மனது ஆவலால் துடித்தது. 'நாம் சதாசிவத்திற்கு அடித்த தந்தி எப்போதோ போய் சேர்ந்திருக்கும். கவலைப் படுகிற

வருக்கு தந்தி அடித்தாகி விட்டது. சித்திக்கு எழுதிய கடிதம் இன்னும்போய் சேர்ந்திருக்காது. விமானதபாலில் (ஏர் மைலில்) போட்டிருந்தால் சீக்கிரம் போயிருக்கும். ஆனால் என்னைப்பற்றி கவலைப் படுகிறவர்களாயிருந்தால் தானே, 'போகட்டும் மெதுவாக' என்று பலவாறாக நினைத்துக் கொண்டான்.

முதலில் அவன் முடிவுசெய்தபடி சதாசிவத்திற்குக் கடிதம் எழுத உட்கார்ந்தான்.

"என் உயிரினும் இனிய சதாசிவம் தாத்தா அவர்களுக்கு,

என்று எழுதும்போது சதாசிவத்தின் முகம் அப்படியே அவன் மனக்கண்முன்பு தாண்டவமாடியது. உடனே மேஜையின்மேல் தன் தந்தையின் படத்தின் பக்கத்தில் வைத்திருக்கும் சதாசிவத்தின் படத்தைஆதாரத்தோடு பார்த்தான். அவனையும் அறியாது அவன் கைகள் தானாகவே குவிந்து அவ்விரு படங்களுக்கும் வணக்கம் செலுத்தின. அவன் மனத்திரையில் அழியாச் சித்திரமாயுள்ள மனித தெய்வம் என்று எண்ணும் சதாசிவத்தை நினைக்கும்போது, 'எப்படிப்பட்டவர் நமக்கு உறுதுணையாக அமைந்துவிட்டார். நமக்கு என்ன குறை. மற்றவர்களுக்கு இப்படிபட்ட வாய்ப்பு, அதிர்ஷ்டம் கிட்டுமா?' என்று பெருமையோடு, கர்வமும் ஏற்பட்டது. கர்வம் என்றால் உலகத்தில் உள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் வித்தை கர்வம், செல்வத்தினால் கர்வம் அப்படிப்பட்டதல்ல. 'பார்த்தீர்களா! எனக்கு எப்படிப்பட்ட தாத்தா இருக்கிறார் உங்களுக்கு இருக்கிறார்களா?' என்று வேடிக்கையாக ஏற்படும் கர்வம்தான். நம் அப்பா இறந்துபோய் மேல்லோகத்தில் தெய்வமாயிருந்து ஆசீர்வதிக்கிறார். சதாசிவம் தாத்தா நம்முடனேயே இருந்து உதவி என்றால் சாமான்னிய உதவியாசெய்கிறார்' மனத்தில் ஓடும் காட்சியை சட்டென்று நிறுத்தினான். "கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டு ஏதேதோ பயித்தியம்போல் நினைத்துக்கொண்டிருக்கிறோமே" என்று உறக்கவே கூறிவிட்டு கடிதத்தை தொடர்ந்தான்.

அனந்தக்கோடி நமஸ்காரங்கள்செய்து எழுதும் லிகிதம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதவும். நான் ஸௌக்கியமாக வந்துசேர்ந்தேன். காலேஜிலும் சேர்ந்தாயிற்று. பாட்டி, முரளி, ஸரஸா மற்றவர்களையும் விசாரித்ததாகச் சொல்லுங்கள்,

சரஸாவிற்கு நான் எழுதும் விஷயங்களையெல்லாம் கூறுங்கள். மோகன் வீட்டவர் என்னை ரொம்பவும் தடபுடலாக வழி அனுப்பினர். உங்கள் சிநேகிதரும், மோகனின் நண்பனுமான சுதர்ஸன் என்னை நியூ யார்கிலேயே வந்திருந்து, அன்பைச் சொறிந்து பல நாட்கள் நியூயார்க்கையும், வாஷிங்டனையும் சுற்றி காண்பித்து நாங்கள் போகவேண்டிய இடத்திற்கும் அழைத்து சென்றான். எனக்கு அறைகள் கிடைக்கும் வரை தன் அறையிலேயே என்னை வைத்துக் கொண்டு, எனக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து, நல்ல வீட்டையும் தேடிகொடுத்துவிட்டான். நான் படிக்கும் படிப்பே படிப்பவனுதலால் மிகவும் சௌகர்யமாக இருக்கிறது.

நான் பார்த்திருக்கும் இடம் இரண்டு அறைகளும், ஒரு பாத்ரூமும் உள்ள ஒரு பாகம். மேஜை, நாற்காலி, ஸ்டவ், இன்னும் கூறவே வேண்டாம் நமக்கு வேண்டிய அனைத்தும் அமைந்து அழகாக இருக்கிறது. அதற்கு வாடகை என்ன தெரியுமா தாத்தா! நம் தேசத்து பணத்தில் 225 ரூ. நான் போய் அமெரிக்காவை மிதித்த அன்று ரொட்டி, பால், ஆப்பிள்தான் சாப்பிட்டேன். அதற்கு 3-ரூபாய் செலவு. நமக்கு எல்லாம் அதிகமான செலவு என்று தோன்றுகிறதே தவிர, அங்குள்ளவர்களின் வருமானத்திற்கு அது ஒன்றும் அதிகம் இல்லை என்று கூறுகிறார்கள்.

நாம் அமெரிக்கர்களோடு பேசுவது ஆங்கிலமானலும் அவர்கள் பேசுவது நமக்கு எளிதில் புரிவதில்லை. அவர்களுக்கும் நாம் பேசுவது புரியவில்லை. சுதர்ஸனும் முதலில் அப்படிதான் திண்டாடினனும். இப்போது பழக்கமாகி விட்டதாம்.

பிறகு ஒரு அதிசயம் கேட்டீர்களா! கேட்டால் நீங்கள் கட்டாயம் ஆச்சரியப்படுவீர்கள். இப்போது நானே 'சுயம்பாகம்' செய்து சாப்பிடுகிறேன். இங்கு பருப்பு, புளி முதலியவைகள் கிடைக்கவில்லை. காய் கறிகள், பழங்கள், பால், மோர், காபி, ரொட்டி, வெண்ணை, ஜாம் முதலியவைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. கிடைப்பதை வைத்துக் கொண்டு செய்கிறேன். பாட்டியின் கையினல் செய்த ஊறுகாய், பருப்புபொடி முதலியவைகளை கப்பலில் அனுப்பிவிடுங்கள்.

அதுவே போதும் எனக்கு. 'நீ ஏன் படிப்போடு இந்த வேலைகளையெல்லாம் வைத்துக்கொள்கிறாய்' என்று கேட்பீர்கள். நானும் முதலில் இந்த வேலையெல்லாம் நாம் எதற்கு செய்யவேண்டும். ஒரு வேலையாள் போட்டுக்கொள்ளலாம் என்றுதான் நினைத்தேன். இங்கு வேலைக்காரர்கள் வைத்துக்கொள்வது பெரிய ப்ராப்ளமாக இருக்கிறது. நிரந்தரமாக வேலையாள் அமைவது கஷ்டம். வீட்டைச் சுத்தம் செய்யும் வேலைக்கு என்று ஒருவரை நியமித்தோமானால் அவர்கள் குறிப்பிட்ட ஒருநாளில் வந்து இரண்டு அல்லது மூன்று மணிநேரம் என்று கணக்காக வகுத்து வைத்து வேலைகளை முடித்து விட்டு போய் விடுகிறார்கள்.

ஒரு வீட்டில் சினிமாவிற்குப் போனால் வீட்டிலுள்ள குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள என்றால், வேலையாட்கள் 4 மணி நேரம் வந்து பார்த்துக் கொள்வார்கள். வீட்டிற்குப் போகும் போது அதற்குண்டான பணத்தையும் வாங்கி போய் விடுவார்களாம். மேலும் இங்கே உள்ளவர்கள் குழந்தைகள் முதல், வேலையாள் வைத்துக் கொள்ளாமல் தங்கள் வேலைகளைத்தாங்களேசெய்து கொள்கிறார்கள். அப்படியிருக்க நான் மட்டும் என்ன?. அதனால்தான் 'சுயம்பாகத்திற்கு ஆரம்பித்தேன்.

ஒரு முக்கியமான — சந்தோஷமான செய்தி! நம் நாட்டைப்போல் இங்கு இன்டர், பி.ஏ., என்றால் ஒவ்வொன்றும் இரண்டு வருடம் படிக்க வேண்டும் என்று இல்லை. பணவசதியுள்ளவர்கள் ஸௌகர்யமாக நான்கு வருடப்படிப்பை ஐந்து வருடமும் படிக்கலாம். குறைந்த காலத்திலும் முடித்துவிடலாம். இங்கு எல்லோரும் எட்டு மணி நேரம் வேலை செய்யவேண்டும் என்றிருந்தாலும். நான் குறுகிய காலத்திலேயே முடிக்க ஆசைபடுவதால் தினம் பத்து........பன்னிரண்டு மணி நேரம் படிக்கிறேன்.

நான் படிப்பை சீக்கிரம் முடித்துக்கொண்டு வந்து அங்கு என்ன செய்யப்போகிறேன். நீங்கள் அங்கு இருக்கையில் எனக்குக் கவலையேயில்லை. தாத்தா! நான் இங்கு வந்து புதியசூழ்நிலையில், புது நண்பர்களோடு இருப்பதில் வீட்டுக் குழப்பங்களையெல்லாம் அறவே மறந்து விட்டேன், ஆனந்தமாக இருக்கிறேன். சந்தோஷக் கடலில் அமைதியாக நீந்துகிறேன் என்றால் மிகையாகாது என்னைப்

பற்றியே, என்சௌகரியங்களைப்பற்றியே புராணம் போல் எழுதுகிறேனே. இதோ! நான் பார்த்த இடங்களைப் பற்றிக்கூறுகிறேன்.

முதலில் நான் பார்த்தது அங்கு முக்யமாகச் சொல்லப்படும் 104 மாடிகள்கொண்ட 'எம்பயர் ஸ்டேட்பில்டிங்'தான் எலிவேட்டர்மூலம் அதன்மேல் ஏறும்போது விமானத்தில் பறப்பது போலிருந்தது. அங்கிருந்து கீழே பார்த்தால் எல்லாம் ஈ எறும்பு போல்தோன்றியது. பிறகு 'ராக்பெல்லர்ஸென்டர்' முதலிய இடங்களை யெல்லாம் சுற்றிபார்த்துவிட்டு பஸ் ஏறினோம். மற்றவை எல்லாம் விலை அதிகமாக இருக்கிறதே தவிர, பஸ் சார்ஜ் நயம்தான்.

ஒரு இடத்தில் ஏறி 12அணு கொடுத்தால் அந்த பஸ் போகும்வரை நாமும் போகலாம். அடுத்த ஸ்டாப்பிலும் இறங்கலாம். ஆனல் பஸ்சார்ஜ் ஒன்று தான். மணிக்கு 60மைல் போகிறுர்கள். நம் ஊரில் ரயில்வே ஸ்டேஷன் இருப்பதுபோல் இங்கு பஸ் களுக்கும் ஸ்டேஷன்கள் இருக்கின்றன, இங்கு இறங்கி டிபன், காபி சாப்பிட வசதிகள் இருக்கின் றன. பஸ்ஸில் உட்காரும் இடம் ஸோபாபோல் நன் ருக இருக்கிறது. பின்புறத்தை நமக்கு வேண்டியபடி நிமிர்த்தியோ, சாய்த்தோ வைத்துக்கொள்ளலாம்.

நியூயார்க்கிலிருந்து நான் இங்கு பஸ்ஸில்தான் வந்தேன். வழியில் வாஷிங்டன், ராலி போன்ற இடங்களில் சிலநாள் தங்கி பார்த்தேன். சட்டசபை, ஜனதிபதியின் அரண்மனை, நோட் போடுதல், நாணயங்கள் செய்தல் எல்லாம் இங்கிருக்கின்றன. முன்னுள் ஜனதிபதிகளில் முக்யமானவர்களான, வாஷிங்டன், ஜெபர்ஸன் அப்ரஹாம் லிங்கன் இவர்களுக்கு ஞாபகச்சின்னங்கள் உள்ளன. ஒவ் வொன்றும் வெகு அழகாகவும், தத்ரூபமாகவும் உள்ளன. இவைகளிலெல்லாம் இரவில் பெரிய விளக் குகள் போட்டு வெளிச்சத்தில் மூழ்கவைத்திருக்கி ருர்கள். எல்லாவற்றையும் பார்த்தால் தேவலோகம் போல் இருக்கிறது.

ஒவ்வொரு வீடு முதற்கொண்டு, தெருவரையில் அவர்கள் சுத்தமாய் வைத்திருப்பதை பார்க்கும் போது நம்மை அறியாமல் வாயைப் பிளந்து விடு கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது நீங்கள் ஒருவரும் என்னுடன் இல்லையே என்று ஏக்கமாக இருக்கிறது.

நம் இந்தியாவில் எல்லோரும் மேல் நாட்டவரைப்போல் இருக்கவேண்டும் என்றுஎத்தனையோ விதங்களில் நம்நாட்டு வழக்கத்தைவிட்டு மாறுகிறார்கள். மாறும்போதாவது முக்கியமாக, அவசியமான தான நல்பழக்கங்களைக்கற்றுக்கொள்ளக்கூடாதா? இவர்களைப்போல் வீட்டைச்சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், வேலையாள் இல்லாமல் தங்கள் வேலைகளைத் தாங்களே கவனித்துக்கொள்ளுதல் இவையெல்லாம் எங்கு தெரியப்போகிறது.

மற்றொரு நல்ல, புகழக்கூடிய குணம் இவர்களிடம் அமைந்திருக்கிறது. இங்குள்ள பணக்காரர்கள், தங்களைவிட ஏழையாயுள்ளவர்களை இளப்பம் செய்து மட்டம் தட்டுவதில்லை. அவர்களைக்கண்டு பரிதாபப் படுகிறார்கள். ஆனால்....... நம் ஊரில் பணக்காரர்கள் கீழேயே பார்க்காமல் ஆகாயத்தையே பார்க்கிறார்கள். உறவினர்கள் தன்னைவிட கீழ்பட்டவர்களாயிருந்தால் உறவையே துண்டித்து எறிந்து விடுகிறார்கள். நம்வீட்டிலேயே எடுத்துக் கொள்ளுங்கள், ரேவதி மேல்நாட்டவர்களைப்போல அலங்காரம் செய்துகொள்வதில் ஆர்வம் காட்டுகிறாளே தவிர, அவர்களைப்போல் வேலை செய்யவோ, படிக்கவோ, குணவானாக இருக்கவோ தோன்றுகிறதா?.

நம் நாட்டில் வேலைக்காரர்களை கல், மரம் போன்ற ஜடப்பொருளாக எண்ணி உயிரை வாங்குகிறார்கள். அதற்கு முத்துவைப் படுத்தும்பாடு ஒன்று போதுமே. தாத்தா! நான் ஏதோ மனதில் தோன்றியவை எல்லாவற்றையும் ஒருவிஷயம் பாக்கியில்லாமல் வளவளவென்று கொட்டிவிட்டேன். நான் உங்களுக்கு அடித்த தந்தி கிடைத்திருக்குமென நம்புகிறேன்.

நேரில் கூறியதுபோதது மறுபடியும் எங்கள் குடும்பத்துப்பொறுப்பை நீங்கள்தான் ஏற்றுநடத்த வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன். வேறு விசேஷமில்லை.

தங்களையே மனித தெய்வமாக நினைக்கும்
அன்புள்ள பேரன்,

ரஞ்சன்.

இப்படியாகக்கடிதத்தை எழுதி முடித்ததும் அதை எடுத்துக் கொண்டு தபாலாபீசுக்குக் கிளம்பிச் சிறிது தூரம் வரும் போது எதிரில் சுதர்சனை சந்தித்தான்.

"ரஞ்சன்! எங்குபோகிறாய் நானும் வரலாமா?" என்ற வாறு ரஞ்சனின் தோள்மீது கையைப்போட்டுக்கொண்டு நடந்தான்.

"வந்தால் என்ன? சதாசிவம் தாத்தாவிற்குக் கடிதம் எழுதினேன். அதைபோட தபாலாபீஸுக்குப் போகி றேன்"

"கடிதமா?.... இவ்வளவு பருமனாக கதைமேட்டர்போல் இருக்கிறதே எத்தனைபக்கம் எழுதியிருக்கிறாய்?"

"ஏதோ உளறி கொட்டியிருக்கிறேன்"...இவ்வாறாகப் பேசிக்கொண்டே சென்றவர்கள் கடிதத்தைச் சேர்த்து விட்டு வீடு திரும்பினர்.

ரஞ்சனின் மனதில் தான் கடிதம் எழுதியதாகவே தோன்றவில்லை. நேரே சதாசிவத்தினுடனேயே பேசியது போன்ற ஒரு மகிழ்ச்சி. அதனால் அவன் மனம் சஞ்சல மின்றி நிரம்பி இருந்தது.

---

## அத்தியாயம் 11.

### பச்சோந்தி மனமும், பயங்கர உள்ளமும்.

"என்னாங்க! தங்கச்சிக்கு உடம்பு நல்லா ஆயிட்டதா? என்னிக்கு வீட்டுக்கு அழச்சிகினு போக லாங்க?" என்று ஆவலுடன், அங்கு நின்றி ருந்த நர்ஸைப் பார்த்து வேலம் கேட்டான்.

அந்த நர்ஸும் சாந்தமாக "உன் தங்கச்சிக்கு நல்லா குணமாயிட்டது. இன்றைக்கு அழைத்து போகலாம்னு டாக்டரம்மா சொல்லி விட்டார்கள். ஆனால் இன்னும் ஒரு மாதத்திற்கு வேலை ஒன்றும் செய்யாது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்றாள்.

"ஹும்... வேலை செய்யாதங்களா. அது எப்படிங்க முடியும். எங்கபொழப்பே அது தானுங்களே. இந்த ஆஸ்பத்திரிலே இத்தனை நாள் இருந்தேனுங்களே. அது தான் எங்க ஓய்வு" என்று குறையாக் கூறினாள் வள்ளி.

"டாக்டரம்மா சொன்னதை சொல்லிவிட்டேன். வேலைசெய்தால்தான் பிழைப்பு என்றால், உடம்பை கவனித்துக் கொள்ளவேண்டாமா? உன் எஜமானிடம் சொல்லி ஏற்பாடுசெய்"

"எனக்கு உதவி செய்யற எஜமானியண்ட நான் வேலேசெய்ய பாக்கியமில்லே.... அப்படியிருந்தா நான் ஏனம்மா இப்படி இருக்கேன்".

"தங்கச்சி! நான் இருக்கும்போது உனக்கு என்ன கவலே. நர்ஸம்மா சொல்லுகிறமாதிரி உன் எஜமானி யம்மா செய்யாவிட்டாலும் நான் ஏற்பாடு செய்யறேன்"

"அதோ பருமா! உன் கணவனே வந்துவிட்டார், அவரையும் யோசனேகேட்டு செய்யுங்கள்."

அப்போதுதான் வள்ளியைப்பார்க்க வந்த முத்துவை காட்டி நர்ஸ் ஏதோ கூறிவிட்டு போனதும் முத்துவிற்கு ஒன்றும் புரியாததால் 'என்ன மச்சான்! விஷயம் ஏதோ சொன்னுங்களே?" என்ருன்.

"இல்லே அத்தான்! வள்ளியை வீட்டுக்கு அழச்சிகிட லம்னுங்க. ஆனு ஒருமாசம் வேலேயே செய்யக்கூடாதாம்'

"அந்த வீட்டிலே வேலேயேசெய்யாம ஒருமாசமா? ஒரு நிமிசம் இருக்க முடியாதே"

"வள்ளியும் அதெதான் சொல்லிச்சி. நான் எதுக்கு ஒரு அண்ணனுயிருக்கேன். எங்க ஊட்டுக்கு இட்டுகினு போய், ஏதோ நான்குடிக்கிற கூழோ, கஞ்சியோ குடுத்து, ஒருமாசம் ஓய்வாவெச்சிருந்து, அப்புறம் கொண்டு விடறேன்"

"அந்த யோசனேயும் சரியாத்தான் இருக்கு. ஆனு அங்க அம்மாகிட்ட சொல்லிக்கா போனு, அதுக்கு வேறே ஏதாவது திட்டுவாங்களே'

"நீ பேசாம இரு வள்ளி! திட்டட்டம். அதோ அடுத்த படுக்கையிலேஇருக்கவளுக்கு,எஜமானங்ககார்போட்டுண்டு வந்து பாக்கருங்க. இல்லாட்டி, பழமன்னு, காப்பின்னு கொடுத்து அனுப்பருங்க. வள்ளியும் படுத்து இத்தனே நாளாச்சே அவங்க ஒரு ஈ காக்கா வந்து எட்டி பாத்தாங் களா. சதாசிவம் ஐயா இல்லாட்டி நாம எப்படி போயிருப் போமோ. அவங்களுக்கு ஒண்ணும் சொல்லிக்கவேணும்" என்ருன். ஆத்திரத்தால் அவன் கண்கள் சிவந்துவிட்டன.

"மச்சான்! இங்கிருந்தே வண்டி வச்சிகினு நேரே போயிடுங்க" என்றவுடன் அவர்கள் புறப்பட்டனர். முத்து அவர்களே வழியனுப்பிவிட்டு திரும்பி கொண்டிருக்கையில், வீட்டு வாயிலே அடையும் சமயத்தில் அவன் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது.

ரேவதி கையில் டென்னிஸ் பாட்மென்டன் போன்ற பந்தாட்டங்களுக்குறிய பேட்டுடன், பல சிநேகிதிகளுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். 'இத்தனே நாளாகக்குறை யாயிருந்த ஒன்றும் பூர்த்தியாகிவிட்டதா' என்று நினேத்துக் கொண்டே, வாயிலருகிலேயே நின்றுவிட்டான் முத்து.

தாங்கள் கிளம்பும்போது எதிரில் வந்த முத்துவை கவனித்த ரேவதியின் முகம் வெறுப்பால் கருத்தது "தூ! தூ! நல்லகாரியமாகக் கிளம்பும்போது எதிரில வந்து தொலைத் தானே. தரித்திரம் பிடித்தவனை எதிர்கொண்டு கிளம்பி னால் என்ன ஆகுமோ. வாருங்கள் எல்லோரும் சிறிது நேரம் உள்ளே உட்கார்ந்துவிட்டு போகலாம்'' என்றவாறு உள்ளே திரும்பினாள்.

அதற்குள் அவள் சிநேகிதிகளில் ஒருத்தி "ரேவதி! இது ஒன்றும் அபசகுனம் இல்லை. ஒற்றை பாப்பான், இரட்டை சூத்திரன்தான் வரக்கூடாது. அதுவும் உங்கள் வேலையாள்தானே வா போகலாம்'' என்றாள்.

"வேண்டாம்' வேண்டம் தரித்திரம் பிடித்தவர்கள் வந்தால் நம் விளையாட்டில் தோற்க வேண்டியதுதான். சரி இப்போது புறப்படலாம்"

படிதாண்டும்போதே குறுக்கே பூனைஓடியது. "ஐயோ! சனியன் பிடித்த பூனை. இதுதான் ரேவதி அபசகுனம்'' என்ற சிநேகிதிகளின் வார்த்தை தட்டமுடியாது மறுபடி யும் திரும்பினாள்.

எல்லாக் கோபமும் முத்துவின் மீது திரும்பியது. "பீடை! கிளம்பும்போது எதிரில் வந்தான். இரண்டாவது பூனையையும் அனுப்பிவிட்டான். நீ வராது இருந்தால் நாங்கள் நிம்மதியாக முதலிலேயே போயிருப்போம். இன் றைக்கு இத்தனை தடங்கல் நடுவில் ஆட்டம் எப்படி அமை யப்போகிறதோ'' என்று முத்துவை சுட்டெறித்தாள்.

இதைப் பார்த்த முத்து உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே "என்னம்மா ரேவதி! நான் வந்தாலா தடை. எப்போதும் வருகிறவன் தானே. இன்றைக்கு என்னம்மா திடீரென்று வந்துவிட்டது. சரிம்மா. நீ ஏதோக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறாயே. அது என்ன விளையாட் டும்மா''

பொங்கிவந்த கோபம் சீற ஆரம்பித்தது. ''என்ன விளையாட்டோ. உனக்கென்ன. எல்லாவற்றிற்கும் நானும் இருக்கிறேன் நண்டு வளையில்' என்று வரவேண்டாம். எதி ரில் வந்து தடங்கல் செய்தது போதாதென்று இன்னும் நின்று என் மானத்தை வாங்காதே தொலைந்து போ''

'ஹூம். மான அவமானம் என்று ஒன்று இருக்கி றதா'—இப்படி நினைத்தவாறு முத்து உள்ளே சென்றான்.

மூன்றாவது தடவையாவது கூடிவர வேண்டுமே என்ற எண்ணத்துடன் புறப்பட்ட ரேவதிகுழுவினர்களை, மோதித் தள்ளுவதுபோல் வாயிலைக் கடக்கும்போது ஒரு கார் வேக மாக உள்ளே நுழைவதை கண்டு அதிர்ச்சியுற்று நின்றாள்.

183205 83205

[40-ம் பக்கத் தொடர்ச்சி]
எச்சரிப்பாரே என்கர்த்தா சித்தூரில் இப்பொழுதுதான் மாப்பிள்ளை ஊர்வலம் வருகிறதும், வசந்த உற்சவ பங்களாவில் வரவேற்பு நடந்ததும் இப்போதுபோல் தான் இருக்கிறதே. இந்த பாழும் கண் இதை யெல்லாம் பார்த்து களித்த கண், இந்த ஜடலத்துக்கு இப் பொழுது நடந்ததைப் பார்த்தால் என் உடம்பெல்லாம் குலுங்குகிறதே. நான் எழுதுகிறது இன்னது என்று எனக்கே புரியவில்லை. 'மூழிச்சான்' என்று என்னை இப்போதுதான் அழைக்கிறார்ப்போல் இருக்கிறது. என் விலையிலா மாணிக்க மணி இதற்குதானோ இவ்வளவு சீக்கி ரம் **M. A. B. L.** வக்கில் பட்டம் பெற்று என்ன குதூகல மாய் வக்கீல் டிரஸ் போட்டுக்கொண்டு எங்கள் முன்னால் வந்தார். அதை நினைக்கும்போது என் நெஞ்சு அலறு கிறதே. இந்த லெட்டரை எழுதும்போது கடவுள் மீது ஆணையாக இப்படி என் கண்ணில் நீர் வருகிறதே. எந்தக் கடவுளுக்குச் சம்மதமோ, எந்த ஆண்டவனுக்கு இதுமாதிரி செய்யத் துணிந்ததோ? ஈவு இறக்கமற்ற கடவுளே அவன் கோயில் இடிய, என்னைக் காப்பாற்றியஅப்பன் எப்படி மறைந்தாரோ? இல்லைஅங்கேபேசுற்றிக்கொண்டிருக்கிறார் ஆராததுயரத்தை கொடுத்தாரே. எவ்வளவு புத்தி சாதுர்ய மாய், மானைப்போல் துள்ளி அம்மாவிடம் தனி பாஷையில் பேசுவீர்களே. எப்படி இந்தகுழந்தைகளை, சின்ன அம் மாவை,பெரிய அம்மாவை, அப்பாவையும் இந்த பாவி சண் டாளன் தங்கள் சாவைக்கூடப் பார்க்காத லோபியை, தரித்திரனையும் எப்படி விட்டுப் பிரிந்தீர்களோ? எப் பொழுது தங்களைப் பார்ப்பேனோ? தாங்கள் ஒரு நக்ஷத் திரமாய் மேலேயிருந்துகொண்டு திவ்ய வைகுண்டத்திலே கடவுளிடம் இருப்பீர்கள் என்று நான் கடவுள்மீது ஆணை யாக எண்ணி எங்களைப் பிரித்துவைத்த அந்தக் கண்மூடி கோயிலில் அமர்ந்திருக்கும் பார்த்தசாரதி பெருமாளை வேண்டிக் கொள்கிறேன். தாங்கள் என்னமோ எழுதி னான் பயித்தியக்காரன் என்று எண்ண வேண்டாம். சர்வ ஜீவன்களுக் கெல்லாம் தீங்கு இழைக்காத எங்கள் கர்த் தாவை வை. மு. ஸ்ரீ என்று அழைப்போம் என்ற காலம் எப்பொழுது வரப்போகிறது. சின்ன ஐய்யரை இப்பொ ழுதும் நினைத்துக்கொண்டு படுத்தால் என்னைப் பார்த்து புன்சிரிப்பு சிரிக்கிறாப்போல் இருக்கிறதே. நான்கு மாதத் திற்கு முந்தி கனவில் வந்தார். அப்பொழுதாவது நான் அங்கே வந்திருந்தால் தெரிந்திருக்கும். சந்தோஷமாய் கனவில் வந்தாரே என்று இருந்தேன். நீங்கள் எனக்கு தெரிவிக்கக்கூடாதா? சண்டாளனுக்கு தெரியவில்லையே. இந்த ஏழை மீதும் கருணை வைத்து கனவில் வந்தாரே என்று இப்பொழுதுதானே நினைத்து உருகுகின்றேன். அப்பனே நீயே எங்களுக்கு ஆறுதல் சொல்லி, அம்மாளை காப்பாற்று, மனதேர்ச்சி செய்.

சடலத்தை பார்க்கக்கொடுத்துவைக்காத அடிமை, ஆறுமுகம்.

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நீர்மலைத்தோடை
ரூ. 2-8
மனக்கத இகழ்
வனக்குயில்
மதுரகீதம்
ரூ. 2-4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
மாதாஞ்சலி
புனிதவனம்
குணக் குன்று
ஜீவநாடி
ரூ. 1-12
அநாதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
லோகசாசனம்
விராக்கனே
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1-8
பிரதிபலன்
பனித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்
ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா
ரூ. 1-2
அபராதி
ரூ. 1.
வத்ஸகுமார்
பரசத்தினே

பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா 12
மதுமாலிகா
ப்ரேமாச்ரமம்
தியாகமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண
முறைகள்
அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
வைதிகலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
அத்புதசித்தர்கள் 1-0
கோதாஹ்ருதயம் 0-12

## வை. மு. பத்மினி

ரூ. 1-8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
மலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

## சுத்தானந்த பாரதி

காந்தி கீர்த்தனம் 3-8

## ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமவுரை 1-0
அத்ரீவ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.